www.padippakam.com

# HENRICIAN'98



# ஹென்றீசியன் '98

சென். ஹென்றிஸ்
பழைய மாணவர் சங்கம்
பிரான்ஸ்

படிப்பகம்

www.padippakam.com



போர்சூழ்ந்த வேளையிலும், புலம்பெயர்ந்தவேளையிலும்,
எமது மாணவர்களின் காவல்தெய்வங்களாய், அறிவை விதைத்திடும் சிற்பிகளாய் விளங்கும்
எமது கல்லூரியின் ஆசிரியர் குழு.

ஹென்றியரசர் கல்லூரி பழையமாணவர் சங்க பிரெஞ்சுக் கிளையின்
செயற்குழு -1998



படிப்பகம்

www.padippakam.com

*Hail St. Henry, valiant king!*
*Full of joy our voices ring*

*Glorious Patron of our school*
*Deign our conduct so to rule,*
*That in all thoughts and deeds,*
*And in all daily needs,*
*Your example shinning bright,*
*On our lives may shed its light.*



படிப்பகம்

www.padippakam.com

*To*

# OUR BELOVED PONTIFF OUR LOVE & LOYALITY



## His Holiness Our Pope JOHN PAUL II



படிப்பகம்

www.padippakam.com

# யாழ் ஆயரின் செய்தி



உங்கள் எதிர்கால வாழ்விற்கு அடித்தளமிட்ட கல்லூரியையும், அறிவுத்தளமிட்ட முன்னைய ஆசான்கள், அதிபர்கள், விசுவாசத் தளமிட்ட கல்வி அமைப்பு, வாழ்வுக்கு நெறியிட்ட வகுப்பறைகள், விளையாட்டு மைதானம், ஆலயம், கலையரங்கு, உங்கள் இளமைப்பருவ நண்பர்கள் இவையனைத்தையும் உங்களது உள அனுபவத்திலிருந்து அகற்ற முடியாது. "எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்" என்ற முது மொழிக்கேற்ப உங்களின் அறிவுக் கண்களைத் திறக்க இக்கல்லூரி எமது மாவட்டத்தில் தனித்துவமான இடத்தை கொண்டுள்ளது.

எமது மண்ணில் நடைபெறுகிற போர் அனர்த்தங்களாலும், அதனால் ஏற்பட்ட இடப்பெயர்வாலும், ஏற்படுகின்ற பேரழிவாலும் மக்கள் சொல்லொணாத் துயரத்தை அனுபவிக்கிறார்கள். இடம் பெயர்ந்த இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி தியாகம் நிறை அதிபரினதும் பல ஆசிரியரின் தன்னலமற்ற முயற்சியினால் தற்காலிக நிலையிலிருந்து பழைய இடத்துக்கு தற்போது மீளவும் ஆரம்பித்துள்ளது. எமது கல்லூரியை தலைநிமிர வைப்பது எமது நம்பிக்கையும், பாரிய கடப்பாடுமாகும். முன்னைய காலங்களில் நீங்கள் காட்டிய ஆர்வமும் முயற்சியும் எமது பணியை உறுதிப்படுத்தியது. உங்கள் தியாகம் நிறை பங்களிப்பை நன்றியோடு நினைக்கின்றேன்.

இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பிரான்ஸ் கிளைக்கு எனது ஆசியையும் ஆசிச் செய்தியையும் வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன். "இளமையில் கல்வி சிலையில் எழுத்து" என்பது ஆன்றோரின் வாக்கு உங்கள் இளமைக்கால பசுமையான நினைவுகளை இரைமீட்கும் இத்தருணத்தில் யாழ் ஆயராகிய நான் உங்களோடு இணைவது சாலவும் பொருத்தமாகும்.

இறைபணியில் உங்களோடு இணையும் உங்கள் ஆயர்

**பேரருள் திரு. இ. தோமஸ் சவுந்தரநாயகம்.**



படிப்பகம்

www.padippakam.com

St. Henry's College
Ilavalai, NP;
Sri Lanka

*TO: THE HENRICIANS IN FRANCE*

*My dear Henricians,*

*Greetings to you from Ilavalai.*

*I am delighted to send this message of good wishes to all of you when you gather for the Annual General Meeting in September. I am also pleased to learn from your President that you will be releasing a Sovenir on that day. My very warm wishes to all of you and may your gatherings bring you closer to one another and help build bonds of true friendship. The Henrician family, where ever they may be, join you all in love and warm friendship.*

*The concern you have shown for your Alma Mater is very encouraging to all of us. Indeed, we are proud of it. I know that time may not be on your side for all these gatherings, but I am sure your heart will always be with Henrician Family. Last year, I was with you all at the AGM and I apprciated very much the way you conduct yourselves. It encouraged me to double up my efforts for the school and for the Henrician family.*

*May I kindly request you all to continue to build up the Henrician Family at any cost. It may be difficult to get everyone to agree on someything, but, certainly, everyone will appreciate the efforts you are putting to build up the Henrician Family in France.*

*The Staff and Students of St. Henry's join me in wishing you all God's choicest blessings.*

*May God go with you.*

*Yours in the service of St. Henry's*
**Revd. Dr. Justin B. Gnanapragasam**
*RECTOR*



படிப்பகம்

www.padippakam.com

# கடின உழைப்பினால் எதையும் சாதிக்கலாம்



“கடின உழைப்பினால் எதையும் வெல்லலாம்““ இதுவே எமது கல்லூரியின் விருது வாக்கு. 1907 ஆம் ஆண்டில் ஆரம்பமானது எமது கல்லூரி. இலங்கைத்தீவின் எல்லாப் பாகங்களிலிருந்தும் மாணவர்களை வரவழைத்து அம்மாணவர்களின் கல்விப்பசியை தீர்த்து கலைத்திட்ட, இணைக் கலைச்செயற்பாடுகள்யாவற்றிலும் தனக்கே உரித்தான முத்திரை பதித்துக்கொண்டது எம் கல்லூரி.

1992 ஆம் ஆண்டில் இராணுவ நடவடிக்கையும் அதனைத் தொடர்ந்து இடம் பெயர்வும் ஏற்பட்டதனால் மக்கள்யாவரும் தம் உயிரைப்பாதுகாக்கும் நோக்குடன் சின்னா பின்னமாக சிதறி ஓடினர். எமது கல்வி நிலையமும் அதற்கு விதி விலக்காகவில்லை. எமது கல்லூரியில் கல்வித் தேனைப் பருகிய மாணவத் தேனீக்களும் கலைந்தன. மீண்டும் அத்தேனீக்கள் யாவும் மானிப்பாயில் ஒன்று சேர்ந்தன.

எமது கல்லூரித்தாய் சற்றும் கலங்கினாளல்லள். இடரினும் தளரினும் எமதுறு நோய் தொடரினும் “கடின உழைப்பு” என்ற விருது வாக்கியம் தனது சேவையை தொடர்ந்தது. மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள் இன்முகம் காட்டி வரவேற்றனர். எமது கல்லூரி மாலை நேரப் பாடசாலைகளாக இயங்க வசதி செய்யப்பட்டது. எனினும் இடம் பெயர்வினால் எமது மாணவர்கள் அடிப்படை வசதிகள் இன்றி அல்லலுற்றனர். எனினும் விருது வாக்கியத்தை மறந்துவிடவில்லை.
எமது திருச்சபை தொண்டர் நிறுவனங்கள் வேண்டிய உதவிகளை வழங்கின. கொழும்பு, லண்டன், பிரான்ஸ், கனடா ஆகிய இடங்களில் உள்ள பழைய மாணவர் சங்கங்கள் எமது இடுக்கண் களைந்தன. நிரந்தரமான காலை நேரப் பாடசாலையை அமைக்கும் முயற்சி வெற்றி பெற்றது. நிரந்தரமான இடத்தில் கல்லூரி செயற்படத் தொடங்கியது. வசதியற்ற மாணவர்களுக்கு வசதிகள் செய்யப்பட்டன.



படிப்பகம்

www.padippakam.com

ஆசிரயர்களும், மாணவர்களும் ஊக்கமும், ஆக்கமும் அளித்தனர். எமது கல்லூரிச் சோலை இனிய மணம் பரப்பியது.

கலைத்திட்டச் செயற்பாடுகளும் விளையாட்டுப்போட்டிகள், உதைப்பந்தாட்டப்போட்டிகள் இவைபோன்ற போட்டிகளில் வெற்றி பெற்ற அதனால் எம் கல்லூரி பெருமை பெற்றது. பாடசாலை பரிசளிப்பு விழா வணிகத் தென்றல் வெளியீடு என்பனவும் கல்லூரியின் விருது வாக்கியத்துக்கு மெருகூட்டின.
மேலும் ஒரு சோதனை மீண்டும் ஒரு இடம் பெயர் நிகழ்வு. மானிப்பாயிலிருந்து இடம் பெயர்ந்தோம். தென்மராட்சியிலுள்ள புனித நீக்கிலாஸ் தேவாலயத்தில் எமது கல்லூரி இயங்கியது. எமது விருது வாக்கியத்தில் வைத்த நம்பிக்கை வீண்போகவில்லை. இடரினும் தளரினும் எமது மனம் கலங்கவில்லை.

1996 ஆம்ஆண்டு மீண்டும் எமது கல்லூரி வாழ்வில் ஓர் திருப்புமுனையை கண்டோம். எமது பெருமை வாய்ந்த கல்லூரி மண்ணில் கால்பதித்தோம். துன்ப கரமான செய்தி என்னவெனில், எமது அன்னையின் புகழ் காத்த மாணவத் தேனீக்கள் பல வெவ்வேறு இடங்களுக்கும் கலைந்து விட்டன. ஆசிரியச் சிட்டுக்களும் பறந்தோடிவிட்டன. ஆனால் "கடின உழைப்பு" என்ற விருது வாக்கியத்தை மட்டும் நாம் மறக்கவில்லை.
இடம்பெயர்ந்த துன்ப கரமான சூழ் நிலையிலும் கூட எமது கல்லூரியின் உயர்தர வகுப்பு மாணவன் கணிதப் பிரிவில் 4"A" அதி திறமைச்சித்திகளைப் பெற்று கல்லூரி அன்னையை மகிழ்வித்தான். பொறியியல் துறைக்கு தெரிவானான். இதுபோன்று இன்றும் எத்தனையோ மகிழ்வுகள் எம்மைக் காத்திருக்கின்றன. எமது கல்லூரி அன்னை ஒழிமயமான எதிர்காலத்தை நோக்கி விரைகின்றாள். எமது கல்லூரியின் வெற்றி நடைக்கு இறைவனின் ஆசியும் கிட்டும் என்பது எமது நம்பிக்கை.
"கடின உழைப்பினால் எதையும் வெல்லலாம்"

**வண .பிதா. யஸ்ரின் பேணாட்**
**ஞானப்பிரகாசம் அடிகளார்**
அதிபர்.





படிப்பகம்

www.padippakam.com

# Aumônerie Tamoule Catholique Srilankaise France
## இலங்கை தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்
## *Sri Lankan Tamil Catholic Chaplaincy France*

*Date: 20 . 11 . 98*



யாழ். இளவாலை ஹென்றியரசர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் பிரான்ஸ் கிளையின் 1998 ஆம் ஆண்டு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமையும், மகிழ்ச்சியும் அடைகின்றேன்.

"பெற்றதாயும் பிறந்த பொன்நாடும் நற்ற வானிலும் நனி சிறந்ததுவே"
நான் பிறந்து தாவழ்ந்த மண் வாசனை,
எனது ஆரம்பக் கல்வியூட்டிய கல்லூரி,
என்னைத் துறவற நிலைக்கு உருவெடுக்க
உறுதுணையாக நின்ற கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள்,
உடன் பழைய, புதிய மாணவர்கள்

அனைவரையும் பசுமையுடனும் பாசத்துடனும் நினைவு கூரும் போது உண்மையிலையே மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இன்றைய காலகட்டத்திலே நம் மக்கள் பரந்து செறிந்து உலகின் நாலாபக்கமும் சிதறுண்டு ஒரு புதிய வாழ்க்கைக்கு முகம் கொடுத்து வருகிறார்கள். இதனால் எமது பாரம் பரிய வாழ்க்கைமுறை, கலை, கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றிற்கு ஏற்படும் பெரும் சவால்களை எதிர்த்துப் போராட வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம். இது எளிதானதொன்றல்ல, தன்னார்வமுடன் செயல்பட்டு, புலம்பெயர்ந்து வாழும் நாடுகளின் நன்மதிப்பைப் பெற்று, மக்களோடு மக்களாக வாழத் துடிக்கும் பழையமாணவர் சங்கங்கள் போன்ற அமைப்புகள், எமது மண்ணில் மென்மேலும் சிறந்த கல்விமான்களையும், சான்றோர்களையும் உருவாக்கும் பெரும் புனிதப்பணியில் உறுதுணையாகச் செயற்பட வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

மேலும் புனித ஹென்றியரசன் கல்லூரி பழைய மாணவர் சங்க மூத்த, இளைய அங்கத்தவர் அனைவரும் ஒன்றுபட்டு இப் பெரும் பணியை முன்னெடுத்துச் செல்ல வாழ்த்துக்கள். இப் பழைய மாணவர் சங்கம் ஆல மரம் போல் செழித்து வளர ஆசி கூறி மனதார வாழ்த்துகின்றேன். உங்கள் நல்ல நோக்கங்களை இறைவன் நிறைவாக ஆசீர்வதிக்க வேண்டி நிற்கின்றேன். என் அன்பு கலந்த ஆசிகளும் வாழ்த்துக்களும் அங்கத்தவர்கள் அனைவருக்கும் உரித்தாகட்டும்.

வாழ்க! வளர்க! சிறக்க உங்கள் பணி!

**அருட்பணியாளர் ச. மரிய செபஸ்ரியன் அமதி**
இல. தமிழ் கத்தோலிக்க ஆண்மீகப் பணியக இயக்குனர்.



படிப்பகம்

www.padippakam.com



*Rev. Bro. A.Soosaithasan, S.S.J.*
*Director General*
*Society of St. Joseph*
*T'phone : 026-21936*

*Brother's House*
*Power House Road*
*Trincomalee*
*Sri Lanka*

*22nd July 1998*

## Mesage of Felicitation

*Greetings to all Henricians in France from the Brothers of the Society of Saint Joseph.*

*It is with a heart filled with joy and appreciation that I forward this message of felicitations to the Sovernir to be publishes in conjunction with the Annual General Meeting of the Old Students Association of St. Henry's College, Ilavalai, in France.*

*I am deeply moved by the loyalty displayed by the past Henricians now domiciles in France. Though far away from our fair Isle, you have rederved a corner in your loyal hearts to harbour memories of your Alma Mater and contribute to her well-being and advancement. You are well aware that she exists amidst adversity and tribulations. Hence, she solicite your loyalty and generosity. I am confident that Henricians spirit, inculcated in your mind during your formulative years, will prevail in you, as it has in the past and will continue to shine brightly in the future to maintain the pristine glory and the lofty traditions of our Alma Mater, and contribute to her efforts to produce worthy Henricians.*

*May I include with prayers and sincere wishes for the success of all your future endevours.*

*Yours in His service,*

*Signed : A.Soosaithasan*
*Rev. Bro. A.Soosaithasan, SSJ*
*Director General*
*Society of St. Joseph*
*and Principal*
*St. Joseph's College*
*Trincomalee*



படிப்பகம்

www.padippakam.com



# அன்றும் வசந்த மலர்! இன்றும் வாடா மலருக்காக!

முக்கனிகள் வாழை-மா-பலா சுவையின் தரத்திற்கு சவால் விட கொஞ்சும் கிளிகள் கெஞ்சி அதனைக் கொத்திவிளையாட பொறுமையிழந்த கமுகப் பழக்குலைகள் மின்சாரச் சிமிழ்களாய்க் கண்சிமிட்ட வெற்றிலைக்கொடிகள் முருக்கமரத்தில் முதுகு சொறிய திராட்சைக் கொடிகள் பழக்குலைகளின் சுமை தாங்காது வளைந்து நெளிய இளவாலையில் வசந்தம் வீசிய காலத்தை ஒரு முறை திரும்பிப்பார்க்கின்றேன்.

அந்த வசந்தகாலத்தில் எமது கல்லூரியின் வனப்பையும் செயற்கைப் புயலில் சிக்கிச் சீரழிந்து புலம் பெயர்ந்த காலத்தில் சீர்குலைந்த எழிலையும் எடை போட்டுப்பார்க்கின்றேன். விசனம், வேதனை, வெறுப்பு, விரக்தி அத்தனையும் தாங்கிக்கொள்கிறேன்!

மீண்டும் எமது கல்லூரி இவ்வருடம் அதே வளாகத்தில் வீர நடைபோடுகின்றது என்ற செய்திகள் காதில் ஒலிக்கின்றன. அந்த மகிழ்சிகரமான சூழ்நிலையில் இன்று (27.12.1998) எமது வருடாந்த ஒன்று கூடலும் ஒளி விழாவும் இடம்பெறுகின்றன. மகிழ்ச்சி! மட்டிலா மகிழ்ச்சி!!

இன்றையதினம் எமது அழைப்பை ஏற்று வருகைதந்து சிறப்பிக்கும் பிரதம விருந்தினர் சிறப்பு விருந்தினர் ஏனைய சகோதரத்துவ கல்லூரிகளின் பிரமுகர்கள் பழைய மாணவ மாணவிகள் கலைஞர்கள் கவிஞர்கள் எழுத்தாளர்கள் படைப்பாளிகள் மற்றும் வருகைதர இயலாத அன்புள்ளங்களையும் இவ்வருட மலர்மூலம் வரவேற்கின்றேன்.

நடப்பாண்டு 97-98 நீண்டுவிட்ட போதிலும் கூட எமது சாதனைப் பட்டியலும் நீண்டு கொண்டேபோயிருக்கின்றது. விளையாட்டுத் துறையில் குறிப்பாக உதை பந்தாட்டத்தில் பாரிய வளர்ச்சியுடனான பங்கேற்பு, கலைத்துறையில் குறிப்பாக வானொலி, மேடை, நாடகம், குறுந்திரைப்படம், ஓவியம் சார்ந்தகலைஞர்களின் பரிணாம வளர்சி பங்கேற்பு எமது கல்லூரியின் பழைய மாணவசங்கத்தினரை அடையாளம் காட்டக்கூடியதாக இருப்பதென்றே கூறவேண்டும்.

அடுத்து எமது முக்கிய பங்களிப்பை எடுத்துக் கொள்ளும்போது எமது கல்லூரியின் அத்தியாவசிய புனரமைப்பு வேலைகளுக்காக ரூபா.150,000 வரை ஒதுக்கீடு செய்யப்பட்டு கல்லூரி அதிபர் வண.பிதா *Justin. B. Gnapragasam.* அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. இதற்கும் மேலாக தனிப்பட்ட ரீதியில் பிரான்ஸ் வாழ் பழைய மாணவர் எண்மர் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்து வரும் கல்லூரி மாணவர்கட்கு கல்வி ஊக்கநிதியாக ரூபா2,05000 அதிபர் வசம் ஒப்படைத்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது அதிபரின் தகவல்கள் பிரகாரம் கல்லூரியின் இன்றைய தேவைகள் ஏராளம் இருப்பினும் கல்லூரியின் சிதைக்கப்பட்ட முன் முகப்பின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட:டுள்ளன என்பது எமக்குப் பெருமகிழ்ச்சியைத்தருகின்றது.

இது எங்கள் 97:98 நடப்பாண்டின் செயற்பாடுகளில் சில! அதேவேளையில் கல்லூரியின் அண்மைக்கால சாதனைகளில் சிலவற்றினை குறிப்பிடவேண்டியதும் அவசியமாகின்றது. புலம் பெயர்ந்த வேளையிலும் மானிப்பாய் அம்பதியில் மாங்கொல்லைகளின் கீழ் கொட்டில்கள் அமைத்து குப்பிலாம்பின் குறுட்டு வெளிச்சத்தில் கல்விக்கூடம் நடாத்தப்பட்டகாலத்திலும் நாட்டிய சில சாதனைகள்வரலாறுப் படிவங்களிலே பதிவாகவேண்டியவை.

1997ம் ஆண்டை மட்டும் எடுத்துக்கொண்டால் யாழ் வலயம் இரண்டில், பாடசாலைகளுக்கிடையேன உதைபந்தாட்டப்போட்டியிலும் உடற்பயிற்சிப்போட்டியிலும் சாம்பியன் கேடயங்களை சுவீகரித்துக்கொண்டமை பாராட்டுக்குரியதே. அதே ஆண்டில் க.பொ.த.(உ.த) பரீட்சையில் கணிதப்பிரிவில் அதிகூடிய திறைமைச்சித்திகள் 4ஏ பெற்று பெருமையைத்தேடித்தந்துள்ளான் க.ஸ்ரீவிசாகன் என்னும் மாணவன்.

இவற்றைச் சற்று நினைவுகூர்ந்து ஒரு இருபதுவருடங்கள் சற்று பின்நோக்கி நடந்துபார்த்தால் அக்காலத்தில் எமது கல்லூரி அகில இலங்கைரீதியாக சுவீகரித்துக்கொண்ட Singer Shield, Ancl Tournament Shield, Singapore Cup அத்துடன் மருத்துவ விஞ்ஞான பீடங்களுக்கு அனுப்பிவைத்துள்ள மாணவமணிகளையும் மனத்திரையில் காணமுடிகிறது.

பட்டியல்களை நீட்டிக்கொண்டே போகலாம். ஆனால் பக்கங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. சோதனைகளையும் வேதனைகளையும் சமன்படுத்துவதற்கு சாதனைகள் பற்றாக்குறைவாக இருந்தாலும் ஆண்டு 97-98 ஒரு விடியலின் அறிகுறிகளை வெளிச்சம்போட்டுக் காட்டுகின்றது. மண்ணின்மீட்பை எல்லோரும் எதிர்பார்க்கும் இவ்வேளையில் கிறிஸ்மஸ் ஒளிவிழா எமக்களிக்கும் கிறிஸ்மஸ் நற்சிந்தனைகளை நினைவில் நிறுத்தி எதிர்வரும் புத்தாண்டு புத்துயிர் அளிக்கும் பொன்னாண்டாக எல்லோர்க்கும் அமையவேண்டுமென வாழ்த்தி எமது சங்கம் சார்பில் அனைவருக்கும் நன்றிகூறி இம்மலரை நிறைவு செய்கிறேன்.

நன்றி

வணக்கம்

**முகத்தார் எஸ். ஜேசுறட்ணம்** (தலைவர் ப.மா.ச.)



படிப்பகம்

www.padippakam.com



# உபபோசகரிடமிருந்து...

கடந்த ஏழு ஆண்டுகளாக இயங்கி வரும் எமது பழைய மாணவர் சங்கம், மீண்டும் இவ் ஆண்டு ஓர் மலரை வெளியிடுவது அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இவ் மலர் மூலம், புலம் பெயர்ந்து வாழும் எமது கல்லூரி பழைய மாணவர்களை மீண்டும் ஒருதடவை சந்திக்க வாய்ப்பளித்த மலர்க் குழுவினரைப் பாராட்டி நிற்கின்றேன்.

சென்ற ஆண்டு கல்லூரியின் 90 வது ஆண்டு விழா வெகு விமரிசையாக வெளிநாடுகளில் உள்ள எமது சங்கத்தினரால் கொண்டாடப்பட்ட வேளையில் எமது கல்லூரியின் இன்றைய அதிபரான அருட்தந்தை ஜஸ்டின் ஞானப்பிரகாசம் அவர்களும், முன்னாள் அதிபர் அருட்தந்தை அன்ரன் இராசநாயகம் அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தது ஓர் வரலாற்று நிகழ்வாகும்.
அதிபர் தனது சொற்பொழிவில் குறிப்பிடுகையில், 92ம் ஆண்டு ஆனி மாதம் இளவாலைப் பகுதிக்குள் இராணுவம் புகுந்த பின்னர் கல்லூரிக்கும் அங்கு கற்பித்த ஆசிரியர்கள், மாணவர்களுக்கும் ஏற்படுத்திய இழப்புகள், சொல்லொணாத் துன்பங்களை விபரித்து, கல்லூரிக்கும் அதன் மாணவர்களுக்கும் புனர் வாழ்வு அளிக்க வெளிநாடுகளில் வாழும் பழைய மணவர்களை உருக்கமுடன் வேண்டியதை நான் இவ்வேளையிலே சுட்டிக் காட்டவிரும்புகின்றேன். அதிபருடைய வேண்டுதலை மனிதாபிமானத்துடன் ஏற்று, எவருடைய வற்புறுத்தலுமின்றி, தாமாக முன்வந்து உதவுமாறு அன்புடன் வேண்டுகின்றேன்.

மேலும் 93 ம் ஆண்டு முதல் தலைவராக இருந்து தனது தள்ளாமையிலும் நோய்களுக்கும் மத்தியில் சங்கத்தை வழிநடத்திச் செல்லும் திரு . யேசுரட்ணம் அவர்களையும் அவருக்குத் தோள் கொடுத்து செயற்படும் இணைச் செயலாளர்கள் சந்திரமோகன், மனோகரன், துணைத்தலைவர் நியூட்டன், பொருளாளர் அன்ரன் மற்றும் செயற்குழு அங்கத்தவர்கள் அனைவரையும் இந்நேரத்தில் நான் பசுமையுடன் நினைவு கூர்ந்து பாராட்டுகின்றேன்.

அத்தோடு எமது சங்கத்திற்கு ஆதரவு நல்கிவரும் இங்குள்ள அனைத்துப் பழைய மாணவர்களையும் பாராட்ட வேண்டியது எனது கட்டாய கடமையாகும். யுத்த மேகம் சூழ்ந்த எமது நாட்டில் எமது கல்லூரியின் உயர்சியும் வழர்ச்சியும் முதுகெலும்பாக விழங்கும் அனைத்துப் பழைய மாணவர்களின் கைகளில் தான் உண்டு என்றும், அதனை மறவாது செயற்படுமாறு அனைத்துப் புலம் பெயர்ந்த பழைய மாணவர்களை வேண்டிக் கொண்டு அனைவரிடமிருந்து விடைபெறும்

அன்புக்குரிய
**கே. ஜே. பாக்கியராஜா.**



படிப்பகம்

www.padippakam.com

## உபபோசகரின் ஆசிச்செய்தி

# நிகழ்வுகளின் நியங்கள்

பாரீஸ் நகரிலே புலம்பெயர்ந்து வாழ்கிறவர்களாகிய நாம் எமது கல்லூரியை மறவாது ஒரு சங்கம் அமைத்து அதன் வளர்ச்சிக்காக கடந்த ஏழு ஆண்டுகளாக ஒரு மனதாக உழைத்து வரும் உங்கள் எல்லோர்க்கும் இம் மலர் ஊடாக என் உள்ளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே வாழ்கின்ற எம் மக்களிற் சிலர் எம் பூர்வீகத்தை பண்பாட்டை மறந்து வாழ்கின்ற வேளையிலும் எம் கல்லூரியின் வித்துக்களாகிய நீங்கள் எம் மண்ணை, தாய்மொழியை, கலை கலாச்சாரத்தை [illegible] எத்தனையோ இடர் பாடுகளிற்கிடையே துன்பத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற உங்களைப் பார்த்து நான் பேருவகை கொள்கின்றேன்.பொதுப் பணியில் ஈடுபடுகின்ற சிலர் பேருக்காக, புகழுக்காக அல்லது அதில் சுரண்டி வாழ்பவர்களை நாம் காண்கின்றோம்.

ஆனால் எங்கள் சங்கத்திற்காக உழைத்தவர்கள், உழைத்துக்கொண்டிருக்கிற நிர்வாக சபை அங்கத்தவர்கள் அத்தனை பேரும் உள்ளத் தூய்மை யோடு உழைத்த உழைக்கின்றவர்களுக்கும் என் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தக்கொள்கின்றேன்.

எமது கல்லூரிக்கு இதுவரை நாம் ஒரு குறிப்பிட்ட வரையறையினுள்ளேயே எமது கடமைகளை நிறைவேற்றி இருக்கிறோம் என்றே நான் எண்ணுகின்றேன்.

ஆனால் காலம் மாறிக் கொண்டே இருக்கின்றது. எமது கல்லூரியின் தேவைகளும் அதிகரித்தே செல்கிறது. இது எமது அதிபர் ஊடாக கடந்த வருடம் கேட்டறிந்த உண்மை.

தகுந்த வேளை வரும் பொழுது எம்மால் செய்யக் கூடிய உதவிகளை மிகக் கூடியளவு செய்ய இப்பொழுதிருந்தே எம்மை நாம் தயார் படுத்திக் கொள்வோம்.

நாங்கள் எங்கே வாழ்ந்தாலும், எத்தகைய கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டாலும் எமது மண்ணையும், மொழியையும், மக்களையும், கல்லூரியையும் எமது மண்ணிற்காய் தமது உயிர்களை தியாகம் புரிந்தோர்களையும் மறவாதிருக்க திடசங்கற்பம் கொள்வோமாக.

ஒன்று பட்டு செயலாற்றுவோம்
வெற்றியின் இறுதிக் கனியைப் பறிக்கும் வரை
எதிரி வீழ்ந்தானென்றால் - நாம்
நிச்சயம் எழுந்தே தீர்வோம்.....
எழுந்தே தீர்வோம்



"வாழ்க கென்றி அரசர் கல்லூரி"
"வளர்க பழைய மாணவர் சங்க பிரான்ஸ் கிளை"

மனம் நிறைந்த வாழ்த்துக்கள்
நன்றியுடன்

**திரு. S. அன்ரனிப்பிள்ளை**



படிப்பகம்

www.padippakam.com



## எமது சங்கத்தின் கடந்த காலச்செயற்பாடுகள், எதிர்காலத் திட்டமிடல்கள், இவற்றுக்கான உங்களின் பங்களிப்புகள் போன்ற விடையங்களை இம்மடல் மூலம் தங்களுடன் பகிரவிளைகிறேன்...

*- செயலாளர்*

புலம் பெயர் வேளையிலும் புகழ் பூத்திருந்த ஹென்றீசியனின் கரங்களைப் பயன் படுத்த வேண்டும் என்றும், எதிரியின் குண்டு மழைகளின் மத்தியிலும் கல்விச் செல்வத்தை கற்றிடத்துடித்து நிற்கும் எம் மழலைகளுக்கும், அவர் தம் நெஞ்சுரம் மிக்க காவலராய் எத்தகைய புலம் பெயர்வுக்கும் மத்தியிலும் தமிழனின் பிறவிச்சொத்தான கல்வி அறிவினை ஊட்டிட துடித்து நிற்கும் பாதுகாவலருக்கும் கரம் கொடுத்து உதவ வேண்டும் என்ற ஓர் உயரிய இலட்சியத்துடன் 1991 ஆம் ஆண்டு பாரிஸ் மாநகரில் ஒரு சில துடிப்பு மிக்க இளைஞர்களுடன் உருவாகி இன்று 250 இக்கும் மேற்பட்ட சங்க உறுப்பினர்களைக்கொண்ட FRANCE இல் உள்ள தமிழர் பழைய மாணவர் சங்கங்களிலேயே மிகப் பெரிய ஓர் சங்கமாக எமது சங்கம் இயங்கி வருவதையிட்டு நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டியர்களே.

மேலும்

இச்சங்கம் தனது எட்டாவது அகவை எய்தும் இக்கால கட்டத்திலே இம்மலர் மூலம் தங்கள் அனைவரையும் சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும் கடந்த காலம் எமது சங்க செயற்பாடுகளைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மாதமும் 11 செயற் குழு உறுப்பினர்களைக்கொண்ட செயற்குழுவைக் கூட்டி எமது சங்கத்தின் வழர்ச்சியின் முகமாகவும், கல்லூரியின் வளர்ச்சியின் பாலும் பல திட்ட அங்கங்களை அலசி ஆராய்ந்து நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

இதைவிட உதைபந்தாட்டத்துறையை பொறுத்த வரையில் எமது தாயகத்தில் இத்துறையில் ஹென்றீசியர் என்ற ஓர் தனி முத்திரையை எவ்வாறு பதித்தோமோ அதேபோல் இங்கும் எமக்கென்று ஒரு கட்டுக்கோப்பான ஓர் சிறந்த அணி என்ற முத்திரையை தக்க வைத்துள்ளோம். ஒவ்வொரு வருடமும் நடைபெறும் போட்டிகளில் பங்கு பற்றி வெற்றிக்கேடயங்களையும் எமதாக்கிக் கொண்டுள்ளோம்.

இதைவிட நாமும் எமது கல்லூரியின் பெயரில் பல உதைப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகளையும் நடாத்தியுள்ளோம்.

மற்றும் கலைத்துறையை பொறுத்த வரையில் அகில இலங்கை ரீதியாக பல கலைஞர்களை உருவாக்கிய கல்லூரி மாத்திரம் அல்ல பல வருடங்கள் தொடர்ந்தும் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட நாடகப்போட்டிகளில் முதலிடத்தை தட்டிச்சென்று கலைத்துறையில் தனக்கென ஒரு இடத்தை தக்க வைத்து வருவது எமது கல்லூரி என்பது தெரிந்ததே.

இன்று இப்புலம் பெயர் மண்ணிலும் எமது சங்கம் பல முத்திரைகளை கலைத்துறையில் பதித்து வைத்திருக்கிறது.

எமது ஆண்டு விழாக்களிலும், நத்தார் தின விழாக்களிலும் எமது கலைத்துறையினர் தமது திறமைகளை வெளிப்படுதுத்துவது மாத்திரம்மல்லாது, எமது தாயகத்தில் காடுகளிலும்,



படிப்பகம்

www.padippakam.com

கடும் நோய்களுடனும், எதிரியின் குண்டு மழையுடனும் போராடி வரும் எமது மக்களுக்கு உதவிக் கரம் நீட்டும் முகமாக தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் ஆதரவுடன் கலைவிழாக்களை நடாத்தி அம்மக்களின் துயர்களில் சற்றேனும் பங்கெடுத்து வருகிறோம். இது இவ்வாறிருக்க எமது கல்லூரிக்கான உதவித்திட்டங்களை பொறுத்தவரை அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க உதைப்பந்தாட்ட அங்கிகள், உபகரணங்கள், மின் வழங்கற்கான (ஜெனரேற்றர்) பணம், மற்றும் நிர்வாகச் செலவுக்கான பணம் என்பவற்றையும் ஒவ்வொரு ஆண்டும் கல்லூரியால் நடத்தப்படும் புலமை பரிசில் திட்டத்திற்கமைய 3 வகுப்பு மாணவர்களுக்கான பணக்கொடுப்பனவுகளையும் வருடா வருடம் வழங்கி வருவதுடன், எமது கல்லூரியின் ஆரம்பசபையான புனித வளநார் துறவிகள் சபைக்கு அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பணக்கொடுப்பனவுகளை வழங்கி உள்ளோம். இதைவிட இரு முறை இங்கு வருகைதந்த யாழ் ஆண்டகை, மன்னார் மறைமாவட்ட ஆண்டகை அவர்களுடனான ஒன்று கூடலில் பங்கேற்று காடுகளில் சிக்கித் தவிக்கும் எமது மக்களின் துயர் துடைக்க அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க புனர் வாழ்விற்கான நிதியினையும் வழங்கியுள்ளோம்.

மற்றும் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்ந்து கல்வி கற்று வரும் கல்லூரி மாணவர்களுக்கு கல்வி ஊக்க நிதியாக (Fixed Deposit) 20,500 பிரஞ்சுப் பிராங்குகளை சேகரித்து அதிபருக்கு அனுப்பியுள்ளோம்.

இதைவிட சென்ற வருடம் அதிபர் அவர்கள் இங்கு வந்திருந்தபோது எம்முன் வைத்த கோரிக்கயைின் பேரில் கல்லூரியின் முகப்பை சீரமைப்பதற்கு 15,000 பிரஞ்சுப் பிராங்குகளை அனுப்பி வைத்துள்ளோம்.

இது இவ்வாறிருக்க உதைபந்தாட்ட துறையை பொறுத்த வரையிலும் சரி, கலைத்துறையை பொறுத்த வரையிலும் சரி இதில் பங்கு கொள்ளும் உறுப்பினர்களே தங்களைச்சார்ந்த துறைக்கான "நிதிச்சுமை"யை சுமக்க வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள். இதனால் பல திறமை மிக்கவர்கள் இவற்றிலிருந்து ஒதுங்கவேண்டிய சந்தர்ப்பத்தை எதிர் நோக்குகிறார்கள்.

ஏன் இன்றைய எங்களின் கைகளில் தவழும் ஹென்றீசியர்-98 மலர் கூட நான்கு ஆண்டுகளின் பின் வெளிவரக் காரணமே நிதி நிலமைதான். எம்மையும் மிஞ்சி எம்முன் எழுந்து நிற்கும் மிகப் பெரும் விடையமே நிதிப்பற்றாக்குறைதான்.

ஆகவே இம்மலர் மூலம் தாங்கள் எமது சங்கத்தின் வளர்ச்சியின்பால் மிகுந்த அக்கறை கொண்டவர்கள் என்பதையும் மனதில் நிறுத்தி எமது மழலைகளுக்கும், எம் கல்லூரிக்கும் புத்துயிர் ஊட்டுமாறு தாங்களும் புனித ஹென்றி அரசர் கல்லூரியின் பழைய மாணவர்கள் என்ற ரீதியில் தங்களின் முழு ஒத்துழைப்பை உரிமையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

"அடிமைத்தழையில் இருந்து விடுபட
நாம் புலம் பெயர்ந்தோம் அன்று, ஆயினும்
நம் தலைமுறை இன்னும் அங்கே
அடிமை வாழ்வினிலே மூச்செடுக்கிறது.""
கைகொடுப்பது நம் கடமையல்லவா...

சங்க வளர்ச்சி கல்லூரி வளர்ச்சியில்

**கி. யஸ்ரீன் சந்திரமோகன்**

செயலாளர்

## நடப்பாண்டின் செற்குழுவினர்

**1997– 1998**

| | |
|---|---|
| தலைவர் | : திரு. எஸ். ஜேசுரட்ணம் |
| உபதலைவர் | : திரு. ஏ. நியூட்டன் |
| இணைச்செயலாளர் | : ஜி. ஜே. சந்திரமோகன் |
| | : ஜி.ஏ.ஜி. மனோகரன் |
| பொருளாளர் | : எஸ். ஆர். அன்ரன் |
| செயற்குழு உறுப்பினர்கள் | : ஈ.டி. அமலதாஸ் |
| | : ஜெூன்றிநாதன் |
| | : எஸ். தேவராஜ் |
| | : நிக்சன் |
| | : ஜே. ரவீந்திரன் |
| | : ஜே. எல்மோ |
| உபபோசகர் | — எஸ். அன்ரனிப்பிள்ளை |
| | - கே. ஜே. பாக்கியராஜா |
| கணக்காய்வாளர் | — விக்னராஜா |



படிப்பகம்

www.padippakam.com

# எமது பழையமாணவர் சங்கத்தின் கடந்தஆண்டுகளின் செயற் குழுவினர்

## 1991– 1992

தலைவர் : திரு. ஏ.ஏ.நியூட்டன்
உபதலைவர் : திரு. ஏ.எஸ்.செல்வகுமார்
இணைச்செயலாளர் : G.A.G. மனோகரன்
: E.D. அமலதாஸ்
பொருளாளர் : எம்.ஏ. உதயராஜ்
செயற்குழு உறுப்பினர்கள் : ஏ. ஜெயம்
: எஸ். பெர்ணாண்டோ
: ரி. சேவியர்
: ஜி.ஆர். டண்ஸ்ரன்
: ஜே. ஜெஹன்றிநாதன்
: ஏ. நெல்சன்
உபபோசகர் — எஸ். அன்ரனிப்பிள்ளை
- கே. ஜே. பாக்கியராஜா
கணக்காய்வாளர் — பைலன்

## 1992– 1993

தலைவர் : திரு. எஸ். யூலியன்
உபதலைவர் : திரு. சி. கிருபா
இணைச்செயலாளர் : ஏ.ஜே.வி. ராஜலிங்கம்
: G.A.G. மனோகரன்
பொருளாளர் : எம்.ஏ. உதயராஜ்
செயற்குழு உறுப்பினர்கள் : ஏ. ஜெயம்
: ஜெயசீலன்
: தி. சாம்சன்
: ஜி. ஜே. சந்திரமோகன்
: எஸ். சேவியர்
: ஏ. நெல்சன்
உபபோசகர் — எஸ். அன்ரனிப்பிள்ளை
- கே. ஜே. பாக்கியராஜா
கணக்காய்வாளர் — பைலன்

## 1993– 1994

தலைவர் : திரு. எஸ். ஜேசுரட்ணம்
உபதலைவர் : திரு. எஸ். லூயிஸ் மாட்டின்
இணைச்செயலாளர் : ஏ.ஜே.வி. ராஜலிங்கம்
: ஏ. நெல்சன்
பொருளாளர் : எம்.ஏ. உதயராஜ்
செயற்குழு உறுப்பினர்கள் : ஏ. ஜெயம்
: ஏ. அலெக்ஸிஸ்நாதன்
: ஜி.ஆர்.டி. பிறேம்குமார்
: ஜி. ஜே. சந்திரமோகன்
: ஜே. எல்மோ
: றொபேர்ட்
: நவீனன்
உபபோசகர் — எஸ். அன்ரனிப்பிள்ளை
- கே. ஜே. பாக்கியராஜா
கணக்காய்வாளர் — விக்னராஜா

## 1994– 1995

தலைவர் : திரு. எஸ். ஜேசுரட்ணம்
உபதலைவர் : திரு. ஏ. நியூட்டன்
இணைச்செயலாளர் : ஜி.ஏ.ஜி. மனோகரன்
: ஜே. ஜெயரஞ்சன்
பொருளாளர் : எம்.ஏ. உதயராஜ்
செயற்குழு உறுப்பினர்கள் : சந்திரன்
: கெனடி
: ஜி.ஆர்.டி. பிறேம்குமார்
: அன்ரன் ஜெயக்குமார்
: றொபேர்ட் ஜோன்சன் அன்ரன்
: பாலன்
உபபோசகர் — எஸ். அன்ரனிப்பிள்ளை
- கே. ஜே. பாக்கியராஜா
கணக்காய்வாளர் — விக்னராஜா

## 1995– 1996

தலைவர் : திரு. எஸ். ஜேசுரட்ணம்
உபதலைவர் : திரு. ஏ. நியூட்டன்
இணைச்செயலாளர் : ஜி. ஜே. சந்திரமோகன்
: ஏ. ஜே.வி. ராஜலிங்கம்
பொருளாளர் : எஸ். ஆர். அன்ரன்
செயற்குழு உறுப்பினர்கள் : ஜே. ரவீந்திரன்
: கே. அன்ரனி
: எம். உதயராஜ்
: இ. நிமலகுமார்
: ஜே. அன்ரன்
: ஜே. கிங்ஸ்லி
உபபோசகர் — எஸ். அன்ரனிப்பிள்ளை
- கே. ஜே. பாக்கியராஜா
கணக்காய்வாளர் — விக்னராஜா

## 1996– 1997

தலைவர் : திரு. எஸ். ஜேசுரட்ணம்
உபதலைவர் : திரு. ஏ. நியூட்டன்
இணைச்செயலாளர் : ஜி. ஜே. சந்திரமோகன்
: ஏ. ஜொசி
பொருளாளர் : எஸ். ஆர். அன்ரன்
செயற்குழு உறுப்பினர்கள் : எம். உதயராஜ்
: ஜி.ஆர்.டி. பிறேம்குமார்
: ஏ. அருள்நாதன்
: ஜே. ரஞ்சன்
: ஏ. ஜெயரட்ணம்
: ஏ. சாந்தன்
உபபோசகர் — எஸ். அன்ரனிப்பிள்ளை
- கே. ஜே. பாக்கியராஜா
கணக்காய்வாளர் — விக்னராஜா



படிப்பகம்

www.padippakam.com

# பொருளாளரின் செய்தி

28 rue Caram Prenant
95100 Argenteuil
Tél.: 30 76 67 06
*13.12.1998*

புனித ஹென்றி அரசர் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பிரான்ஸ் கிழையின் பொருளாளர் என்ற ரீதியில் இந்த மடலின் ஊடாக உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

ஒரு ஸ்தாபனத்தின் வளர்ச்சிக்கோ அல்லது அதன் வீழ்ச்சிக்கோ அங்கு முக்கிய பங்கு வகிப்பது அந்த ஸ்தாபனம் பெற்றுக்கொள்கின்ற நிதி வருவாயிலேயே தங்கி உள்ளது.

எமது கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தில் அங்கத்தவர்கள் பலர்இருந்தாலும் ஒரு குறிப்பட்ட சிலரே தமது சந்தா நிலுவைகளை ஒழுங்காக செலுத்தி வருகின்றனர் என்பது இங்கு முக்கிய விடயம்.

இது இவ்வாறிருக்க நாம் ஒவ்வொரு வருடமும் எமது பாடசாலைக்கு விளையாட்டுத் துறை மற்றும் ஏனைய துறைகளுக்கும் அதிபரின் வேண்டுதலுக்கு ஏற்ற வகையில் நிதியினை அனுப்பி இருந்தோம். அந்த நிதி ஆண்டில் (1998) பாடசாலை புனரமைப்பிற்காக 15000பிரங்குகள் மூன்று கட்டமாக பிரித்து அனுப்பி இருக்கின்றோம். ஆகவே எமது நிதி இருப்பு மிகவும் சொற்பமே கையிருப்பாக உள்ளது. இதைப் பல மடங்:காக்க வேண்டியது நாங்களே.

நாம் ஹென்றிசியன் பழைய மாணவர் என்று சொல்லிக்கொண்டிருக்கும் வேளையில் அப் பாடசாலையின் இனப முன்பங்களில் பங்கு கொள்வதுதான் உண்மையான பழைய மாணவனுக்கு அழகு. ஆகவே இன்றைய நிவையில் எமது பங்கு என்ன என்பதை நாமே தீர்மானிப்போம்.

**அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு**

இப்படிக்கு
**எஸ். ஆர். அன்ரன்**
பொருளாளர்
புனித ஹென்றியரசர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம், பிரான்ஸ்



படிப்பகம்

www.padippakam.com



# கல்லூரியில் கால் வைத்தேன்!

தென்றல் தெருக்கூட்டும் செந்தமிழ் சோலை இளவாலை.
வான்மதி கோயில் முகட்டில் தேன் மழை பெய்யும்.
கல்லறை ஆண்டவன் காலடியில் சொல்லப்படும் பிரார்த்தனைகளைக் கேட்க, விரைந்து செல்லும் மேகக் கூட்டங்கள் மெல்லக் கீழே இறங்கி வந்து காது கொடுக்கும்.
குயில்களும், கிளிகளும் மருத நிலத்து நிலங்களை வியந்து பல்லவி பாடும்.
நம்மூர்க் காகங்கள் கூட நமக்கு பஞ்ச வர்ணக் கிளிகள் தான்.
அந்த மண்ணின் சுகம் கம்பன் கவிதையிலும் காணமுடியாது.
அந்தக் கிணற்றில் குளித்து,
அந்தப் பள்ளியில் படித்து,
அந்த மண்ணில் நடந்து,
அந்த மண்ணில் உறங்கி,
அந்த இழநீர்-அந்தக் கள்ளு-அந்தக் கீரிமலை-அந்த சேந்தான் குளம்-அந்தக் கடற்காற்று.........உள்ளத்தில் பூங்குழல் ஊதவில்லையா?
பரம்பரையின் வேர்களை அங்கே காணலாம்.
வயல்கள்
தோட்டங்கள்
வீதிகள்
வீடுகள்
வேலிகள்-கதியால்கள்......மா, பலா, தென்னைகள் கூட நம் முன்னோரின் வேர்வையில் தெரியும் விழக்குகள்!
அந்தத் தேன் கூட்டில் சிங்கள அரசின் கல்லெறி வீழ்ந்தது.
அது நடந்தது 1991 ஆனியிலும், ஆவணியிலும்.
மக்கள் ஆரோக்கியமான வாழ்வு, கல்லூரியில் கலை வளர்ச்சி, தெய்வீகத் திரு உறவு, கன்னியர் மடத்துப் பூந்தென்றல் எல்லாம் சிதறியது.
சிங்கள ஆக்கிரமிப்பு நமது மண்ணில் காலூன்றி 15 வருடங்கள் ஆயின.
அந்தக் கொடூரமான இன அழிப்பின் அபசுரங்கள் இன்னும் எங்கள் காதுகளில் கேட்கிறது.
மாங்கனித் தீவு வெள்ளைக் காரரிடமிருந்து சிங்களவருக்கு ஏலம் போனது.
தங்க மணி விழாவும் இவ்வாண்டு பொங்கும் பெருவிழாவானது.
பேருக்குச் சுதந்திரம்: ஆனால் வடகீழ்ப் பகுதி வேருக்கு நீரில்லை.
தீட்டுப் பச்சை அரிசியும் கிடையாமல் தமிழர் பட்டினிச்சாவு வன்னியில்.
நமது தமிழ் இனத்தின் பிரதி நிதிகள் முதுகெலும்பை சந்திரிகாவுக்கு விற்று விட்டார்கள்.
குண்டெறிவோருக்கு குத்துவிளக்கேற்றி மாலை போடும் கும்பலில் அவர்களைக்



படிப்பகம்

www.padippakam.com

காண்கிறேன்.
அரசியல் தேர் ஆணி களன்று போகாமல் தாங்கும் தர்மசீலர்கள் என்ற புகழ் அவர்களுக்கு உண்டு.
அம்பலத்தில் ஒப்பாரி வைப்பதும் அறிக்கை விடுவதும் ஒருபக்கம்: மறு பக்கத்தில் சந்திரிகா சரணம் கச்சாமி.
உணவில்லை, மருந்தில்லை, வெளிச்சமில்லை, போக்கு வரத்தில்லை, தொழில் வாய்ப்பில்லை. இந்த அவலத்தில் சுற்றி வளைப்பு, தேடல், சூடு, குண்டு........நெருக்கடிகளும் துன்பங்களும், துயரங்களும் மலையாய் குவிந்து வரும் இவ்வேளையில் கல்லூரிகளின் நுகத்தை சுமப்பவர் பாராட்டுக்குரியவர்.
பல அதிபர்கள், ஆசிரியர்கள், தொழிலுக்கு முழுக்குப்போட்டபின்னர் வெளிநாடு வந்திருப்பதை நாமறிவோம்.
ஆனால் கல்லூரியின் சுக்கான் பிடிக்கும் மாலுமி கல்லூரி கொடிகட்டிப்பறந்த காலத்துக்கு அதனை அழைத்துச் செல்ல ஆசைப்படுகிறார்.
6 மாதத்தின் முன்பு அங்கே கால் வைத்தேன்.
சிரிப்பு முன்னுக்கு வர பின்னுக்கு வந்தார் அதிபர்.
பலா மரங்களும் மாமரங்களும் இலைகளை விரித்துக்கைதட்டின. புதிய பூமரங்களின் புன்னகை தெரிந்தது.
சுமார் 2.00 மாணவர்களின் முகங்களில் முல்லைகள் பூத்திருந்தன.
அன்பின் கங்கை அன்னை திரேசாவுக்கு அன்று விழா எடுத்தனர்.
கன்னியர் மடத்திலிருந்தும் அதே தொகையான மாணவிகள் வந்து மடத்தில் பூத்திருந்தனர்.
பாரம்பரியத்தின் வேர்களே கருகிய இந்த நிலத்தில் இவ்வளவு தொகையான மாணவர்கள் எங்கிருந்து வருகிறார்கள்.?
முள்ளுக் கம்பிகளால் அடைத்த வீதிகள், நிவாரணம் கிடையாத வீடுகள்,
எங்கு பார்த்தாலும் துவக்குடன் துரோகப் படை. போக்குவரத்தின் அளவும் அழிந்த நிலை.
இதற்குள் நுழைந்து எப்படி வந்தார்கள்?
கல்வியின் தாகம், அதிபரின் நம்பிக்கை, எதிர்காலத்தின் இலட்சியம் இவைதான் அவர்கள் காலங்களுக்கு உரம் அளிக்கின்றன.
அதிபரின் பாராட்டில் நான் முழுகினேன்.
அன்னை திரேசாவின் வரலாற்றை நான் விபரித்தேன்.
கல்லூரியின் அதிபர் யஸ்ரின் அடிகளாரின் சேவையை என்கண்களால் அல்ல என் கண்ணீர்த் திவலைகளிநூடாக கண்டேன்.
அதிபர், இறைவனால் இளவாலைக்கு வழங்கப்பட்ட ஒரு வரம்.
பலருடைய வேண்டுதலில் கிடைத்த வெண்புறா.
இளவாலைக்கோயில், கல்லூரி, கன்னியர் மடத்தின் சுவர்களுக்கு அப்பால் சிறிது தூரம் சென்றேன்.
இன அழிப்பின் மிருக வெறியை அங்கு கண்டேன்.
பல வீடுகள் மண் மேடுகளாய் கிடந்தன.
வேறு பல வீடுகள் மரணப் படுக்கையில் உள்ளன.
ஒரு சில உயிராபத்தில் தவறியிருந்தாலும் மஞ்சமுன்னா, புல்லாந்தி, நாயுருவி, எருக்கலை வளர்ந்து அந்த வீடுகளின் முகங்களை மூடி விட்டன.
வீடுகளை மட்டிட மண்வெட்டி பிக்கானுடன் போகவேண்டும்.
இளவாலைக்கு போகும் வீதியே மடுவுக்குப் போகும் வீதியை நினைவூட்டுகிறது.
என்று சமாதானத்தின் கதவு திறபடும்?
அரசியல் ஆதிக்கத்தின் சுவர் விழும்?
பௌத்த குருமாரின் பஞ்சசீலம் பாயிலிருந்து எழுந்து நிற்கும்?
தமிழினத்தின் தாகம் தணியும்?
அப்போது கல்லூரியும் கொடி கட்டிப் பறக்கும்.

**கவிமணி- இளவாலை- அமுது-**



படிப்பகம்

www.padippakam.com

சிறுகதை



# தேவதைகளின் தேவைகள்

— சிவக்கொழுந்து பரமானந்தன்

அள்ளிக்குடுத்தனல்லோ.......... நான் அணைத்தெடுக்கும் கையாலே,ஓ.." அம்மாதான். அம்மாவேதான் ஒப்பாரி வைக்கிறா. அம்மாவுக்கு இது வழக்கம். எங்களுக்கும், சுத்தி இருக்கிற ஆட்களுக்கும் இது பழக்கமா போச்சு. முந்தி துவக்கத்திலை எல்லாரும் வந்து அம்மாவுக்கு ஆறுதல் சொல்லுவினம், இப்ப ஒருதரும் வாறதில்லை. அம்மா ஒப்பாரி வையாத நாளிலைதான், ஏன் ஒப்பாரி வைக்கேல்லை எண்டு கேட்பினம். அந்த அளவுக்குஇந்தக் குடியேற்றத்திலை சிரிச்சு போச்சு.!

அம்மா செத்துப்போன அப்பாவுக்காக, அண்ணாவுக்காகத் தான் அழுகிறாவோ..... அல்லது..... உயிரோடை இருக்கிற எங்களுக்காக அழுகிறாவோ?....... எனக்கு அது தெரியாது. யோசிக்கிறன், ஆறாம் ஆண்டு படிக்கிற என்ரை சின்ன மூளைக்கு அது நெடும்பிரித்தல் மாதிரி.........
பிடிபடுகுதில்லை. தேவாரம் முடிந்த பிறகு வகுப்புகள் துவங்கிற மாதிரி அம்மாவின்ர ஒப்பாரி முடிஞ்ச பிறகே அன்றாட வேலைகளை நாங்கள் துவங்குவம். சுத்திவர இருக்கிறவையும் அப்படித்தான்.

"சன்னதியானே! என்ரை நாலுதேவதைகளிலை ஒண்டை கொண்டு போட்டாய், இந்த மூன்று தேவதைகளை யாவது காப்பாற்றிப்போடு அப்பனே" அம்மாவின் ஒப்பாரிக்கு அம்மாவே வைக்கிற முற்றுப்புள்ளிதான் அது. அம்மா மூன்று தேவதைகள் எண்டது என்னையும் பெரியபிள்ளையையும் தங்கச்சியையும்தான். எங்களுக்கு எல்லாமே அம்மாதான். அம்மாவுக்கு எல்லாமே நாங்கள்தான்.
கணிதபாடம் முடிய ஆங்கிலம் தொடங்கிறமாதிரி அம்மாவுக்கு ஒன்று முடிய இன்னொரு கஸ்ரம். கஸ்ரம் தாங்க மாட்டாமல் எங்களுக்கும் அடிப்பா. எங்களுக்கு அடிச்சுப்போட்டு, தான்தான் அழுவா. அம்மாவின் அழுகை, ஒப்பாரி அடி எல்லாத்தையும் நான் இடைக்கிடை மறந்து போவன். ஆனால் அம்மா சொல்லுற ஒன்றை மட்டும் நான் மறக்க மாட்டன். ஈரச்சோக்காலை எழுதின எழுத்துப் போலை என்ர மனதிலை இருந்து அழிக்க முடியாது.

"குஞ்சு, கெலிச்சத்தம் கேட்டால் விட்டுட்டு ஓடி வந்திடு பள்ளிக்கூடம் நாளைக்கும் நடக்கும்தானே. உன்னை நம்பித்தானே நாங்கள் இருக்கிறம்". அம்மா திரும்பத் திரும்ப இதைத்தான் சொல்லுவ. பன்னிரண்டு வயதிலை என்னை இந்த வீட்டிற்கு மொனிற்றர் ஆக்கினது ஆர்? அப்பாவோ...... கடவுளோ..... வேறை ஆருமோ, எனக்குத் தெரியாது.

அப்பா ஏன் செத்தவா?, நான் அம்மாவை ஒரு நாளும் கேட்கேல்லை. எனக்குப் பயம். அம்மா அழுவா, ஒப்பாரி வைப்பா. துண்டுதுண்டாக கிழிச்ச உலகப்படத்தை பொருத்திப் பாப்பமே அப்படி அம்மா சொல்லுற ஒப்பாரி துண்டுகளை நான் பொருத்திப் பார்த்து கண்டு பிடிச்சனான். எங்கடை சொந்த கிராமத்தை விட்டிட்டு வந்த பிறகு அப்பாவுக்கு வேலை என்ற ஒன்று இல்லை. கொம்பிளவுக் காட்டிலை விறகுவெட்டி அதைச் சைக்கிளிலை கட்டிக் கொண்டுபோய் ஆவரங்கால் புத்தூர் பக்கம் தேத்தண்ணிக் கடையளுக்கு குடுக்கிறவர். எல்லா நாளும் எண்டில்லை. ஆனால் அம்மாவுக்கு கஸ்ரம் இல்லை. அம்மா சந்தோசமாக இருந்தவ. ஒரு நாள் விறகுக் கட்டுக்கை இருந்த விரியன் பாம்புக்குட்டி அப்பாவுக்கு முதுகிலை கொத்தி அப்பா சைக்கிளோடை விழுந்து உடம்பெல்லாம் நீலம் பாரிச்சு வாயாலை நுரைதள்ளி - அந்த இடத்திலயே செத்துப்போனார். அம்மா பட்ட பாடும் - அழுத அழுகையும் எனக்கு வாய்பாடுமாதிரி ஒரு மனப்பாடம்.

"நீங்கள் இல்லாமல் இந்தத் தேவதைகளையும் வைச்சுக்கொண்டு நான் இனி என்ன செய்யப்போறன்?" அப்பா செத்தபிறகு அம்மா கேட்டுக்கேட்டு அழுதா. உயிரோடை இருக்கேக்கை அம்மா ஒருநாளும் அப்படிக் கேக்கஇல்லை. படிப்பிக்காத பாடத்திலை கேக்கப்பட்ட கேள்வி மாதிரி எனக்கு பெரிய அந்தரமாய் போச்சு.

"குஞ்சு எழும்படா பள்ளிக்கூடம் போறதில்லையே நானும் இண்டைக்கு நேரத்துக்கு போகவேணும்"
எனக்கு படுக்கையாலை எழும்புறதுக்கு விருப்பமில்லை. இருந்தாலும் எழும்பிறன். படுத்திருந்த உரச்சாக்கை சுத்தி வைக்கிறன். இந்த உரச்சாக்கு..... ஆ...... எனக்குத் தெரியும். அப்பா தோட்டத்திற்கு உரம் எடுத்தது. எங்கடை வீடு, தோட்டம் இப்ப எப்படி இருக்கும் தெரியாது.

சதுரறுள் போட்ட மாதிரி குறுக்கும் மறுக்குமாக நாற்பது ஐம்பது கொட்டில்களிலை எண்பது தொண்ணூறு குடும்பங்கள். எல்லோரும் எங்களைப் போல உடுத்த உடுப்போடை சேர்த்த செல்வங்களை விட்டுட்டு பெற்ற செல்வங்களோடை வந்தவைதான்.

கட்டித்தந்த புதிசிலை கொட்டில்கள் நல்லாத்தான் இருந்தது. போன மாரிக்கு அடிச்ச காற்றுக்கு எல்லாமே பென்சிலாலை எழுதி துப்பல் போட்டு அழிச்ச மாதிரி சிதைந்து போச்சு. அதை திருத்தி தர ஆருமே இல்லை. இப்ப இந்த கொட்டில்களை கண்கொண்டு பார்க்கேலாது. விளையாட்டுப் போட்டிக்கு போட்ட இல்லப்பந்தல் மாதிரி கிடைச்சதைகொண்டு,நினைச்சமாதிரி அவரவரே திருத்தி இருக்கினம். வெயில் காலம் கொஞ்சம் பரவாயில்லை. மழைக்காலம் தான் பெரிய கஸ்ரம். வீட்டு முற்றத்திலை முழங்காலளவு வெள்ளம். வீட்டுக்கை ஒரே சறுக்கல் பள்ளிக்கூடத்து பைப்படி மாதிரி. எங்களை ஆருமே கவனிக்கிறதில்லை.! . பள்ளிக்கூடத்திலை சமயபாடசேர் சொன்னது "புதிசா வந்த பொடியளை அகதிகள் என்று சொல்லப்படாது, இடம் பெயர்ந்தவை என்று சொல்ல வேணும்" என்று எப்படிச் சொன்னால் என்ன இரண்டும் ஒண்டுதானே. கவனிப்பாரற்றவை எல்லாரும் அகதிகள் தானே.



படிப்பகம்

www.padippakam.com

எப்பவாவது சிவப்பா கூட்டல் அடையாளம் போட்ட ஜீப் ஒண்டு வரும். ஏ . எல் படிக்கிற பொடியன்கள் மாதிரி வெள்ளை லோங்சும் வெள்ளை சேட்டும் போட்ட நாலஞ்சு பேர் இறங்குவினம். எல்லாரையும் கூப்பிட்டு கதைப்பினம். டாப்பு கூப்பிட்ட மாதிரி எல்லாற்றை பெயரையும் கூப்பிடுவினம். புதிசா வந்த ஆட்களை கூட்டி இடம் மாறினவையை கழித்து பெருக்கி பிரிச்சுக் கொண்டு போவினம். பிறகு எப்ப வருவினம் தெரியாது.

"குஞ்சு, பல்லை மினுக்கி, முகத்தை கழுவு, நேரம் போகுதெல்லே இனி நீ படிச்சு..... ஒரு மனிசனாகி, இந்தப் பெட்டைக் குஞ்சுகளுக்கு ஒரு வழி பண்ணி, இதையெல்லாம் பார்க்க நான் இருப்பனோ" அம்மா இழுத்துப் பறிச்சு கதைக்க எனக்கு பொல்லாத சினம் தான் வரும். பத்து வருசத்திலை செய்யிறதை பத்து நாளிலை செய்ய வேணுமென்று அவசரப்படுகிறா. ஏன் அப்படி. அப்பா மாதிரி தானும் செத்துப் போவனோ?, எண்டு அம்மாவுக்குப் பயம். தான் இல்லாட்டி நாங்கள் அகதிகளாகிப் போவமாம். இப்ப மட்டும் என்ன. அகதிகள் தானே இப்ப நாலு அகதி, அம்மா இல்லாட்டி மூண்டு அகதி. அவ்வளவு தானே.

கொடியிலை தொங்கிற காற்சட்டையையும் சேட்டையும் எடுக்கிறன். முந்தி எண்டால் எந்த சேட்டைப் போடுவம். எந்தக்காற்சட்டையை போடுவம் என்று யோசிப்பன். இப்ப கரைச்சல் இல்லை. ஒரு சேட்டு, ஒரு காற்சட்டை அதுவும் இனி தோய்ச்சால் கிழிவன் எண்ட மாதிரி. என்ரை அளவுக்கு சின்னனான அந்தக் காற்சட்டையையும் என்ரை அளவுக்கு பெரிதான அந்தச்சேட்டையும் போடுறன். சேட்டை காற்சட்டைக்குள்ளை விடுவம். அப்பதான் காற்சட்டை போட்டிருக்கென்று தெரியும். இப்ப எப்படி இருக்கும். வினோத உடைப்போட்டிக்கு போன மாதிரி இருக்குமோ!. எனக்கு தெரியேல்லை. கண்ணாடி என்றால் பார்க்கலாம், கண்ணாடி தான் இல்லையே.

பள்ளிக்கூடத்திலை போன திங்கட்கிழமை எல்லாருக்கும் சீருடைத்துணி குடுத்தது. எனக்கும் தான். வெள்ளை நிறத்திலை சேட்டுத்துணி, நீல நிறத்திலை காற்சட்டைத்துணி இரண்டுக்கும் நடுவில் ஒரு நோட்டீசும் வைச்சு தந்தது. அந்த நோட்டீஸ் நான் வாசிச்சனான். நல்ல தமிழிலை தடித்த எழுத்தில அச்சடித்த வசனங்களும் எனக்கு நல்ல ஞாபகம்.



இலவசக்கல்வி என்ற எமது கொள்கையின் முழுப்பயனையும் பெற, இலவச புத்தகங்கள்- இலவச மதிய
உணவு என்ற தொடரில், இன்று இந்தச் சீருடைகளை இலவசமாக இந்த அரசு வழங்குகிறது. இந்த நாட்டின் எதிர்காலச் சந்ததிகள் இதன் பயனை முழுதாக பெற்று சிறந்த பிரஜைகளாக விளங்கவேண்டும்.

இங்ஙனம்,
மேன்மை தங்கிய ஜனாதிபதி.
சிறீலங்கா குடியரசு

என்றிருந்தது. எனக்கு சோதனைப் பேப்பரை கையிலை தந்த மாதிரி ஒரு நடுக்கம், வெள்ளைத்துணி சிவப்பாக, நீலத்துணி நாவலாக எனக்கு தெரியுது. எனக்கு இது வேண்டாம். வேண்டவே வேண்டாம். அடுத்த நாள் வகுப்பு சேர் கேட்டவர் "நேற்று என்ரை மேசையிலை சீருடைத்துணியை மறந்து போய் விட்டிட்டு போனது ஆர்? " நான் தான். பேசாமல் இருந்திட்டன். பிறகு சேர் அதைப்பற்றி அவர் கதைக்கவே இல்லை.

வகுப்பிலை இருக்கிறன். எனக்குப் பயம். படிக்க விருப்பமில்லை என்றில்லை. எந்த நேரமும் ஒரு யோசினை, ஒரே யோசினை. அம்மா இப்ப என்ன செய்வா? எங்கையாவது இடிக்க, குத்த போயிருப்பா. அம்மா அப்பிடி வேலை செய்தால் தான் எங்களுக்கு சாப்பாடு. பெரிய பிள்ளை பள்ளிக்கூடம் போனால் இப்ப மூன்றாம் ஆண்டு படிப்பாள். தங்கைச்சியைப் பார்க்கிறதுக்காக அம்மா அவளை மறிச்சுப் போட்டா. தங்கச்சி இப்ப நடந்து திரிவாள். எந்த நேரமும் பெரியவளோடை தான். அவள் பின் வாங்கில் பொடியள் மாதிரி ஒரே குளப்படி.

கொப்பியிலை முன்தாளை கிழிக்க பின்தாளும் விட்டுப்போகுமே எங்கடை வீட்டிலும் அப்படித்தான். ஒரு ஆளில்லாட்டி இன்னொரு ஆளும் இல்லை. ஏதோ இரைகிற சத்தம், என்னது கெலியோ.......... நான் எழும்பி ஓடட்டோ. அம்மாவும் சொன்னவ கெலிச்சத்தம் கேட்டால் ஓடி வந்திடு. வடிவாக உற்றுக் கேட்கிறேன், அது லொறி ஒன்று போகுது. நான் கவனமாக இருக்க வேணும்,

அண்ணை மாதிரி நானும் செத்தால், ஐயோ, அம்மா துடிச்சு போவா. அண்ணையும் இந்தப் பள்ளிக்கூடத்திலை தானே செத்தவர். இரண்டாம் தவணை சோதினை நேரம்.
சோதினை எழுதிக்கொண்டு இருந்தனாங்கள். கெலி எங்கை இருந்து வந்ததோ தெரியாது, பட பட வென்று சுடுற சத்தம். எட்டாம் வகுப்பு மண்டபத்திலை ஐயோ என்றெரு குழறல் சத்தம். ஆரது? பழகின குரல். எல்லாரும் ஓடுகினம். நானும் ஓடிப்போய் பார்க்கிறன். ஒரு பொடியன் குப்புற விழுந்து கிடக்கிறான். அண்ணை, ஐயோ அண்ணைதான். கெலியாலை சுட்ட குண்டு கூரையை துளைத்து,

சோதனை எழுதிக்கொண்டிருந்த என்ர அண்ணையின்ர முதுகையும் துளைத்து..... ஐயோ கடவுளே. வெள்ளைச் சேட்டு சிவப்பாக- நீலக் காற்சட்டை நாவல் நிறமாக- இப்பவும் எனக்கு தண்ணிப்படம் ஒட்டின மாதிரி பளிச்சென்று தெரியுது.
எல்லாரும் ஓடி வருகினம். கணித சேரும், தமிழ்பாடச்சேரும் அண்ணையை தூக்கினம். அண்ணையின்ரை முகத்தை தடவி அண்ணை...... அண்ணை என்று கூப்பிடுகிறன். கண்ணை முழுச்சு அண்ணை என்னைப்பார்க்கிறார். அம்மா.......... தங்கைச்சியவை....... அம்மாவின் மூத்த தேவதையின் ஆசை அது.அம்மா வந்தா. அழுது குழறி சன்னதம் ஆடினா. தானும் திப்பிலி ஆடி, எங்களையும் திப்பிலி ஆட்டி, அந்தப்பள்ளிக்கூடத்தையே ஆட்டி விட்டா. பெற்றார் தின விழாவுக்கு வந்த சனம் மாதிரி ஒருசேனை சனம். அம்மா மாதிரி இன்னும் எத்தனை அம்மாக்கள் இந்த பள்ளிக்கூடத்திலை இப்படி சன்னதம் ஆடப்போகினம். தெரியாது. அப்பாவுக்கு கொள்ளி வைச்சது அண்ணை. அண்ணைக்கு கொள்ளி வைச்சது நான். எனக்கு...... ஆர். நான் சாக மாட்டன், நான் சாகக்கூடாது, என்ரை அம்மா- பெரியபிள்ளை- தங்கைச்சி மூன்று பேரையும் விட்டிட்டு நான் சாகவே மாட்டன். கெலியிலை இருந்து சுட்டால்....... எப்படி தப்புறது, யோசிக்கிறன், அதிபர் சொன்ன மாதிரி கடவுள் காப்பாற்றுவாரோ.?

அதிபர் மூன்றாம் தவணை பள்ளிக்கூடம் துவங்கின அன்று கூட்டம் வைச்சு சொன்னவர். "இந்தப் பள்ளிக்கூடம் ஒரு கோயில்- இந்த பிள்ளைகளெல்லாம் தேவதைகள். இந்த மண்ணிலை நடக்கிற எதுவும் தெரியாத- தெரிய விரும்பாத-தெரியமாட்டாத தேவதைகள் நீங்கள். உங்களுக்கு பாதுகாப்பு கடவுள் தான். அவர் ஒருவரே உங்களை காப்பாற்ற வேண்டும்" கடைசி பாடத்துக்கு மணி அடிக்குது, என்ன பாடம். அட்டவணையை திருப்பி பார்க்கிறன்.



படிப்பகம்

www.padippakam.com

தமிழ், தமிழ்தான். தமிழ் புத்தகத்தை எடுக்கிறன், முன்மட்டையும் இல்லை, பின் மட்டையும் இல்லை. எங்களைப்போலை, எங்களுக்கும் அப்பா என்ற முன்மட்டையும்- அண்ணை என்ற பின்மட்டையும் இலலைத்தானே. மிச்சதாள்களும் இன்னும் எத்தனை நாளைக்கு.

தமிழ் பாடத்துக்கு சேர் வாறார், சேர் நல்லவர், எனக்கு தமிழ் பாடமும் விருப்பம். சோதனையிலை தொண்ணூறு புள்ளிக்கு மேலை எடுப்பன். "மாலை வணக்கம் சேர்" எல்லாரும் எழும்பி நிக்கிறம். சேர் இருக்கச் சொல்கிறார். இருக்கிறம். "பிள்ளைகளே" சேரின்ரை குரலைக் கேட்கவே எனக்கு ஆசை. ஐஸ்பழக்காரன்ரை மணி அடிச்ச மாதிரி ஒரு தெளிவு. "நீங்கள் எல்லாரும் சீருடை தைத்து விட்டீர்களா?" சேர்தான் கேட்கிறார். போச்சு, போச்சு கொப்பி அடிச்சு பிடிபட்டமாதிரியாப்போச்சு. முழுசுறன், எல்லாரையும் சுத்திப்பார்க்கிறன். மோகன், சிவா, தருமன், ரூபன் எல்லாரும் போட்டிருக்கினம். பின் வாங்கில சுப்பிரமணியமும் போடஇல்லை. நான்.......... நானும் போடஇல்லை. சேர் கேட்கிறார். "சுப்பிரமணியம் ஏன் சீருடை போட்டு வரஇல்லை."சேர் அது ரெயிலர் இன்னும் தைச்சு முடியஇல்லையாம். வாற கிழமை போட்டு வருவன் என்று சொல்லி போட்டு முதலாம்பிள்ளை ரிப்போட் வாங்கினது மாதிரி எல்லாரையும் ஒரு பார்வை பார்த்தான்.

அடுத்ததா சேர் திரும்பி என்னை பார்த்தார். புட்போல் மாட்ச் அம்பயர் மாதிரி. இந்திரன் நீ ஏன் சீருடை போட்டு வரவில்லை. வால் சிக்குப்பட்ட கடுதாசிப்பட்டம் மாதிரி எழும்பவும் மாட்டாமல் இருக்கவும் மாட்டாத ஒரு நிலமை. சமய பாடத்து திரிசங்கு சொர்க்கத் தேவனோ, உலகத்து கடவுள்கள் எல்லாரும் ஒரேயடியாக வந்து உதவ மாட்டினமே. அம்மா மாதிரி முருகா என்று குழறட்டோ.முருகன் எங்கடை வீட்டு முன் தட்டியிலை தொங்குகிற முருகன் படம். அது படமல்ல- எங்கேயோ கண்டெடுத்த பழைய கலண்டர். யாமிருக்கப்பயமேன் என்று சொல்லுகிற மாதிரி கையிலே வேலும் இடுப்பில கோவணமுமா அந்த முருகன். எங்களுக்கும் நாங்கள் இருக்கிற சூழலுக்கும் பொருத்தமான முருகன் படம். சேர் பிறகும் கேட்கிறார் "இந்திரன், வாற கிழமை நீயும் போட்டு வருவியா"? சுப்பிரமணியம் திரும்பி என்னை பார்க்கிறான். தான் சொன்ன விடையை என்னையும் கொப்பியடியடா என்ற பார்வை எனக்கு ஒரு மாதிரி இருக்கு.

சேர் கைகாட்டுகிறார். கிட்டவரட்டாம். வாங்காலை எழும்புறன், கை வாங்கிலும் ஒட்டிக்கொண்டு வருகுதோ இல்லை. என்னை ஒரு மாதிரிபார்க்கினம் நேரம் பார்க்க நிழலை அடி அளப்பினமே! அப்படி அடியளந்து கொண்டு சேருக்கு கிட்ட போறன். தெரிந்த விடையை சொல்லத் தெரியாத மாணவன் நான். "சேர் என்னட்டை சீருடைத்துணி இல்லை, நான் கொண்டு போக இல்லை" சொன்னன். உரேக்கா உரேக்கா எண்டு அந்த விஞ்ஞானிமாதிரி சேர் எழும்பி ஓட இல்லை. ஆனால் கண்டு பிடிச்சிட்டார்.
"ஓ என்னுடைய மேசையிலை சீருடைத்துணியை மறந்துபோய் விட்டுட்டு போனது நீயா" கேட்டார். வேறை யார் நான் தான். நானேதான். அதிபர் சொன்ன தேவதைகளில் ஒன்று. அம்மாவின் மூத்த தேவதை.
மறக்கவில்லை சேர், எனக்கு மறதி என்று இல்லை சேர். எனக்கு ஞாபகம், ஞாபகம்கூட, அதுதான் சேர் எனக்கு பிரச்சினை.

அப்ப வேணுமென்று தான் விட்டுட்டு போனியா? இலாச்சியை இழுத்து சீருடைத்துணியை எடுத்து மேசையில் வைத்தார். நான் போட்டிருந்த உடுப்பைப் பார்க்கிறார், பிறகு சீருடைத் துணியையும் மாறி மாறிப் பார்க்கிறார். அவருக்குக் கண் சிவக்கேல்லை. மீசை துடிக்க இல்லை. கோபம் வரவில்லை. எனக்கு காய்ச்சல் குறைகிற மாதிரி பயம் குறையிறதும் தெரியுது. "இந்திரன் இது அரசாங்கம் குடுக்கிற துணி, அதுவும் ஜனாதிபதி இலவசமாக தாறார். எல்லாரும் தைச்சுப் போட்டிருக்கினம், ஏன் நீ மட்டும் வேண்டாமெண்டுட்டாய்"
சேர்தான், எனக்கு விடை தெரியும். எப்படிச் சொல்லுறது. செய்கைவழியே பிழை- விடைமட்டும் சரியா வருமோ. விளாங்காய் திண்டிட்டு தண்ணி குடிக்காட்டி தொண்டைக்கை விக்குமே. அப்படி ஒரு தவிப்பு. ஒரு மாதிரி சமாளிச்சுக்கொண்டு அவருக்கு சொல்லுறன். "சேர் சீருடைத்துணி இது வேண்டாம் எனக்கு இங்கிலீசுப் படத்திலை போடுவினம் சேர் மினுமினுப்பா- அலுமனிய நிறத்திலை சுட்டாலும் குண்டு துளைக்காத- துணி. அதிலை இரண்டு யார் துணி வாங்கித்தரச் சொல்லி அந்த ஜனாதிபதிக்கு எழுதுங்கோ சேர். அப்பிடித்துணி எண்டால் தைச்சுப்போட்டு வருவன் சேர்."

சேருக்கு ஒரு மாதிரியாய்ப் போச்சு, அவற்றை மீசை துடிக்குது. கண்கள் சிவக்கிறதும் தெரியுது. ஒருமாதிரி முகம் வித்தியாசமா, ஆ... சேர் அழுவர்போலை முகம் தெரியுது. தலையைக் கவிண்டு கொண்டு மேசையிலை தெரியிற சூரிய வட்ட வெளிச்சத்தையே உற்றுப்பார்க்கிறார். பிறகு தலையை நிமிர்த்தி வெளிச்சம் வந்த துவாரத்தை கூரையிலை தேடுகிறார். ஒன்றல்ல பல துவாரங்கள். எல்லாம் எல்லாமே குண்டுச்சன்னம் வந்த அல்லது வரப்போகிற துவாரங்களாக அவருக்கும் தெரியுது போல. திரும்பி வகுப்பிலை இருக்கிற- அவர் அடிக்கடி சொல்லுகிற தேவதைகளை- வீடியோ படக்கமரா மாதிரி ஒவ்வொன்றா பார்க்கிறார். என்னைப்போல ஒரு ஏக்கம் அந்த முகங்களிலும் தெரியுதோ? சேர் திரும்பி வெள்ளைத் துணியையும் நீலத்துணியை கண்வெட்டாமல் பார்க்கிறர். வெள்ளைத்துணி சிவப்பா- நீலத்துணி நாவலாக அவருக்கும் தெரியுதோ என்னைப்போல. பிறகு இதுபற்றி ஒண்டுமே கதைக்கேல்லை.

நன்றி : 'அம்மா' -பிரான்ஸ்





படிப்பகம்

www.padippakam.com

# ILAVALAI CONVENT MAHA VIDYALAYAM

## பழைய மாணவிகள் ஒருங்கிணைப்புக் குழு – பிரான்ஸ்

23.11.1995

பிரான்ஸ் வாழ் இளவாலை திருக்குடும்ப கன்னியர் மட (ம.வி)பழையமாணவர்கள் ஒருமித்து, இன்று இடம்பெறும் இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் 27.12.1998 எடுக்கும் ஆண்டு ஒன்று கூடலுக்கும், ஒளிவிழாவுக்கும் எமது நல்வாழ்த்தினை தெரிவித்துக்கொள்கின்றோம்.

இளவாலை எம் மண்! மண் வாசனை நிரம்பிய மண்! கல்வித் தினை தேடி வந்த இளம் சிட்டுக்களுக்கு, கூடும், குடியமர்வும், அறிவும், ஆன்மீகமும், பயிற்சியும், தேர்ச்சியும் அளித்து, பக்குவப்படுத்திவிட்ட கல்விக் கூடங்கள், கல்லூரியும், கன்னியர் மடமும், என்பதையாரும் மறுக்க முடியாது.

பழைய மாணவர்கள் எங்கெங்கு புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் ஆங்கங்கே சங்கங்கள் அமைத்து தமது கல்லூரியின் புனரமைப்புக்கும் புனர் வாழ்வுக்கும் நேசக் கரம் நீட்டுகிறார்கள். (பிரான்ஸ், லண்டன், கனடா) இவை காலங்கள் பாராட்டும் உன்னத சேவைகள்.

எமது கன்னியர் மட(ம.வி) நூறாண்டு விழாவை கண்டும் கூட எமக்கொரு அமைப்பு இங்கு பிரான்ஸில் இல்லையே என்பது எமது சக பழைய மாணவிகளின் அங்கலாய்ப்பு! அந்த அபிலாசைகளை ஈடேற்றி வைக்கும் பொருட்டு புனித ஹென்றி அரசர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினரின் தீர்க்க தரிசனமான சிந்தனையும், செயற்பாடும், எம்மை ஒரு சங்கம் அமைக்கும் அளவுக்கு முன்னெடுத்துச் சென்று விடுகிறது. எமது நன்றிகள்.

அண்மையில் எமது (ம.வி) அதிபர் சங்கைக்குரிய சோதரி. யோசபின் சத்தியாப்பிள்ளை அவர்கள், தங்கள் தலைவர் திரு.எஸ். ஜேசுரட்னம் அவர்களுக்கு எழுதிய கடிதத்தைப் பார்வையிட்டோம். உடை, சீருடை, உணவு, உறக்கம், சுகாதாரம், மருத்துவ வசதிகள் கேள்விக்குறியாகவே தென்படுகின்றன.

எனவே நாமும் நேசக்கரம் நீட்டுவது எமது காலத்தின் கட்டளையாகிவிட்டது.

இன்று தங்கள் முன்னிலையில் எமது சங்கமும் தோற்றி விக்கப்படுகின்றது. இது எங்கள் குழந்தைப் பருவம். தடுக்கில், தத்தித் தவழ்ந்து, தவழ்ந்தெழுந்து நடக்கும் வரை, எமது சங்கத்தின் வழிப்படுத்தல் அல்லது நெறிப்படுத்தல், தங்களின் ஒரு கடமைப்பாடாகவும் இருக்கலாம். நோக்கு ஒன்று, குறிக்கோள் ஒன்று நம்பிக்கை, அத்திவாரத்தின் முதற் கட்டம் இன்று தெரிவாகும் எமது சங்க அலுவலர்கள், அவர் தம் செயற்பாடுகளில், தங்கள், ஆலோசனைகளையும் பெறுவார்கள் என்ற நம்பிக்கையும் எம்மவர்க்குண்டு.

தாங்கள் கடந்த காலங்களில் தங்கள் கல்லூரியால் ஆற்றிய சேவைகள் எமக்கும் ஓர் வழிகாட்டியாக அமையும். என்ற நம்பிக்கையில் தங்கள் சேவைகள் தொடரட்டும். எண்ணங்கள் மலரட்டும். என்று எமது பழைய மாணவிகள் சார்பில் மீண்டும் வாழ்த்துகிறோம்.

முடிவுரையாக, ஓர் பாடல், முட்டி மோதுகிறது.

"மாங்கிளியும் மரங்கொத்தியும் கூடுதிரும்ப முடியுது, ஆனால் நாம் மட்டும் ஏனோ இன்னும் வீடு திரும்ப முடியல்லே"? காலைக்கதிரவன் காலையில் உதயமாகும் வேளை திருக்குடும்ப கன்னியர் மடத்தின் நிழல், இளவாலை ஆசனக் கோயில்மேல், சிந்தித் தெறிக்கின்றது. மாலையில் மறையும் வேளை, புனித ஹென்றி அரசர் கல்லூரியின் கோபுரத்து செந்நிழல், அதே ஆலயத்தை அமைதியில் ஆழ்த்தி விடுகிறது.

வாழ்க இளவாலை! வளர்க அதன் இரு கலங்கரை விளக்குகள்-கல்லூரி-கன்னியர் மடம்!!

என்றும் இறை நம்பிக்கையில்

ஒருங்கிணைப்புக் குழு சார்பில்

**திருமதி. ரூபி விக்ரர்**

28, Rue Barlies, 93100, Montreuil, FRANCE



படிப்பகம்

www.padippakam.com



சொந்தங்களை இழந்தபின்பு
கன்னியாஸ்திரிகளின் அரவணைப்பில்
எம் மூத்தோர்



போர்வடுவின் நினைவுச்சின்னமாக கலையிழந்தநிலையில்
எமது சகோதரகல்லூரி
இளவாலை புனித திருக்குடும்ப கன்னியர்மடம்





படிப்பகம்

www.padippakam.com



| | |
|---|---|
| இலங்கை 50 | பிரான்ஸ் 200 |
| இந்தியா 48 | ஐரோப்பா 120 |
| கனடா 150 | சிங்கப்பூர் 55 |
| அவுஸ்ரேலியா 100 | தாய்லாந்து 55 |

**மொத்தமாக கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவு!**
**வெகு விரைவில் சகல நாடுகளுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்படவுள்ளது.**

தொடர்புகளுக்கு : **Mr Siva / Mr Yoges**
*14, Rue Biot, 75017 Paris*
*Tél.: 01 40 08 05 05 – 01 40 08 07 08*



படிப்பகம்

www.padippakam.com

# ஹார்ட்லிக்கல்லூரி

*Phone: 548*
*POINT PEDRO*
*SRI LANKA*

## பழைய மாணவ மாணவிகளுக்கு, எமது வாழ்த்துக்கள்!

இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தினர் வருடாவருடம் எடுத்து வரும் ஒன்று கூடலும், சென்ற ஆண்டு கலந்துகொண்ட அந்த மகிழ்வான சில மணித்தியாலங்களையும், அறுசுவை உணவையும், கலை நிகழ்ச்சிகளையும் நினைவில் நிறுத்தி, தங்கள் அனைவரையும், இம் 'மலர்' மூலம் வாழ்த்துவதில், பெருமகிழ்ச்சி அடைகின்றோம். எமது கல்லூரியும் 1987ல் தோன்றி தனது 100வது ஆண்டு விழாவை 1987 கண்டு கொண்டதுடன் ஞுபகார்த்த தபால் முத்திரை பெற்றுக்கொண்டுள்ள அதே வேளையில், கிறீஸ்தவக் கல்லூரிகளுக்கிடையிலான, பரஸ்பர அன்பு, ஆன்மீக பரிமாற்றங்கள், சினேகித பூாவமான ஒன்றுகூடல்கள், விளையாட்டுத்துறை ஈடுபாடுகள் என்ற ரீதியில், தங்கள் கல்லூரிக்கும், எமது கல்லூரிக்குமிடையே, வலுநெருக்கமான தொடர்புகள், காலாகாலமாக இருந்து வருகின்றது. பருத்தித்துறை என்னும்போது, பனங்காட்டினையும், பனம்பொருளும் எப்படி முன்னிலை வகிக்கின்றதோ, அதே போன்று, இளைவாலை என்னும் போது, வாழை, மா, பலா, சிறப்பு நிலை வகிக்கிறது. மட்டுமல்ல பல ஒருமைப்பாடுகளையும் காணமுடிகின்றது. தங்கள் கல்லூரிக்கு எதிர்ப்புறமாக கன்னியர்மட மகாவித்தியாலயம் எமக்கு, அதே விதமே, மெதடிஸ் மகளிர் உயர்தர வித்தியாலயம் எமது, இரு கல்லூரிகளின் பழைய மாணவ திருவாளர்களின், திருமதிகள், பெரும்பாலானோர், அவ்விரு பெண்பாலர் கல்வி நிலையங்களின் மாணவிகள் என்பதினையும் காணமுடிகின்றது. காலத்தின் கட்டளையால், தங்கள் கல்லூரி மானிப்பாய்க்கு புலம் பெயர்ந்துள்ளது. இளைவாலை என்றவுடன் எம்வயதினர் கண்முன் நிற்பது, குறிப்பாக, உதைபந்தாட்டமாகும். வருடாவருடம்இவ்விரு கல்லூரிகளுக்குமிடையிலான உதைபந்தாட்ட போட்டிகள், பல நண்பர்களை, இரு சார்பாருக்கும் தேடித்தந்ததென்றே கூறவேண்டும். எனது தந்தையார் தந்த தகவல்களின்படி 1950ல் 3ம் பிரிவு அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில், முதற்சுற்றில் எமது இருகல்லூரிகளும் பங்கேற்றபோது, எமது ஹாட்லி கல்லூரி 1-0 கோல்களால் தோல்வியைத் தழுவிக்கொண்டாலும்,, நட்பு நீடித்தது! நிலைத்தது!!..1950ல் தங்கள் 3ம் அணிக்கு பயிற்சிப் பொறுப்பாளராக இருந்தவர் என் தந்தையின் நண்பர், இன்றைய உங்கள் சங்கத் தலைவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. எமது ஹாட்லி கல்லூரியின் பழைய மாணவர்களின் நெஞ்சங்களில் நிறைந்த பலவற்றுள், ஒன்று, எமது ஆங்கில ஆசிரியர் உங்கள் இளைவாலை மண் தந்த் பெருமகன், ஆங்கிலக் கடல், ஓர் லண்டன் சிறப்புப் பட்டதாரி, அவர் பேசும்போது ஆங்கிலம் அவர் உதடுகளில் கொஞ்சி விளையாடும் சுப்பர் கிரிக்கட் துடுப்பாட்டக்காரர். அவர் வேறுயாருமல்ல, உங்கள் கல்லூரியின் பழைய பெருமை மிக்க மாணவன் சீமாம்பிள்ளை மனுவேற்பிள்ளை. "பிள்ளை மாஸ்டர் என்று செல்லமாக அழைக்கப்பட்டவர்.

'இளவாலை' என்று, உங்கள் மண் எப்படிப் பெயர் பெற்றது? இடுகுறிப்பெயரா, இல்லை, காரணப்பெயரா? என்று ஆராட்சியில் இறங்கினோம். 'இள' என்பது இளமை! 'வாலை' என்பது, துடிப்பு, மிடுக்கு! உங்கள் எண்ணங்கள், சிந்தனைகள், செயற்பாடுகள் யாவிலும் இளமை, என்றும் இளமை! முதியோர்களிலும் இளமை ஊஞ்சலாடுகின்றது. அதற்கு உங்கள் சங்கத்தலைவரும் ஓர் உதாரணம்!

வாழ்க வளர்கவென, சகோதரத்துவ நட்புடன் வாழ்த்தும்

**ராஜமனோகரன் முரளீதரன்**
(ஹாட்லி கல்லூரியின் ப.மா. அமைப்பின் சார்பில்)



படிப்பகம்

www.padippakam.com



# பசுமை நிறைந்த நினைவுகளை மீட்டிப் பார்க்கின்றேன்...

பசுமை நிறைந்த நினைவுகளை மீட்டிப்பார்க்கின்றேன், நம்தாயகமாம் தமிழ்மண்ணின் வாசனையை நுகர்ந்து பார்க்கின்றேன் வான்உயர்ந்த கோபுரங்கள், தாலாட்டும் கடல்அலைகள், புனிததேவாலயங்கள், இவற்றின் மத்தியிலே சரித்திர வரலாறுகள் படைத்த, எம்முன்னோர்களால் ஸ்தாபிக்கப்பட்ட, சாதனைபடைத்த கல்லூரிகள், யாழ்நகரின்மத்தியிலே அத்தனை வரலாற்று நூல்களையும் தன்னகத்தே கொண்ட, அதிஅற்புத பொக்கிஷமான, தமிழன் பறைசாற்றும் நூலகம்.

இவ்வ அனைத்தும் இப்போது எங்கள் அரச அனர்த்தங்களால், அழிக்கப்பட்டு தங்கள் சொந்த மண்ணை விட்டே, அந்நிய நாடுகளில் அகதிகளாக்கப்பட்டிருக்கும், நம் இனிய உறவுகளுக்காக ஒரு நிமிடம் கண்ணீர் வடிக்கின்றேன்.

அகதிகளாக அந்நியமண்ணில் தஞ்சம் புகுந்து விட்டாலும் கூட அத்தனை இடர் துயர்களுக்கு மத்தியிலும் சமுதாயத்தில் தலைநிமிர்ந்து நிற்பதற்குரிய தகமையை வழங்கிய தாங்கள் கல்விகற்ற புலமைவாய்ந்த கல்லூரிகளை நம் உறவுகள் மறந்து விடவில்லையென்று கண்கூடாகக் காணும் போது பெருமிதம் அடைகின்றேன்.

இந்த வரிசையிலே தனக்கென ஒருதனிப்புகழுடன் விளங்கிவரும் இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியின் (பிரான்ஸ்) பழையமாணவர் சங்கம் ஏற்பாடு செய்திருக்கும் வருடாந்த ஒன்று கூடல் நிகழ்விலே ஒரு மலரையும் வெளியிடும் போது அதற்காக ஒரு வாழ்த்துரையை வழங்கும் வானொலிக் கலைஞனாகிய என்னையும் ஒரு பொருட்டாகமதித்து அழைப்பு விடுத்தமைக்கு என் இதயம் நிறைந்த நன்றிகள்.

உங்கள் கல்லூரியில் பழையமாணவர் சங்கத் தலைவர் முகத்தார். எஸ். யேசுரத்தினம் என் சமகாலக்கலைஞன் உயிர் நண்பன் என் சகோதரர். வ.தயாநிதி உங்கள் கல்லூரியின் பழைய மாணவன். ஆகவே எனது பங்களிப்புக்காக பூரிப்படைவதோடு புலம் பெயர்ந்த நாட்டில் வாழும் எங்கள் சிலர்களின் எதிர்காலத்தை இந்த நாட்டிலே பல அறிஞர்கள் தமிழ்ப் பெருங்குடிமக்களால் அமைக்கப்பட்டிருக்கும், தமிழ் வானொலி எத்தகைய வழிகளில் பங்களிப்புச் செய்து கொண்டிருக்கின்றது என்பனை எடுத்துச் சொல்ல விரும்புகின்றேன்.

வானொலி ஒரு பரந்த சிறந்த ஊடகம் அந்த ஊடகத்தின் மூலம் பல அரிய சாதனைகளை நிலை நாட்டமுடியுமென்பது எனது தாழ்மையான நோக்கு கருத்துக்கள் மக்களைச் சென்றடையும்போது அது புரட்சியாக மாறுகின்றது இந்த வானொலியின் மூலம் நம்மால் சொல்லப்படும் ஆக்கபூர்வமான வெளிப்பாடுகள் வான் அலைகள் ஊடாக மக்களிடம் சென்று அந்தக்கருத்துக்கள் மக்களால் வரவேற்கப்படும்பட்சத்தில் ஒரு புதிய சமுதாயத்தை நம் தலைமுறையினால் உருவாக்க வழி அமைக்கின்றது. புலம் பெயர்ந்த நாட்டில் பிறக்கும் நம் குழந்தைகளின் எதிர்காலத்தை உற்று நோக்கும் போது அந்நிய நாட்டின் சூழல், கலாச்சாரம், பண்பாடு எல்லாமே அந்தக் குழந்தைகளின் கலாச்சார வளர்ச்சிக்கு கல்வி மேம்பாட்டுக்கு பெரும்தடைக்கல்லாகவே அமைந்துவிடுகின்றது. கட்டாயத்தின் நிமித்தம் நம் குழந்தைகள் தாங்கள் வசிக்கும் அந்நிய நாட்டின் மொழியைக் கற்க வேண்டிய சூழ்நிலைக்குத்தள்ளப் பட்டுள்ளார்கள்.

காலத்தின் கோலத்தால் அகதிகளாக்கப்பட்டிருக்கும் எங்கள் குழந்தைகள் இயல்பாகவே நம் இனிய தமிழ்மொழியையும் அதன் கலாச்சார பண்பாடுகளையும் உணர்ந்து செயல்படுவதற்கு பெற்றோரின் பங்கு முதலிடம் வகிக்கின்றது.

தேமதுரத்தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்ற பாரதியின் கனவு நனவாகிக் கொண்டு வருகின்றபோதும் கணிசமான குழந்தைகள் நம் இனிய மொழியாம் தமிழ் மொழியைப் பேசுவதற்கோ படிப்பதற்கோ எழுதுவதற்கோ முடியாமல் திணறும் நிலையில் உள்ளார்கள் காரணம் பெற்றோர்களின் கவனக்குறைவென்றே சொல்லவேண்டும். இந்த நெருக்கடியில் இருந்து விடுபடுவதற்கு இங்கு ஒலித்துக்கொண்டிருக்கும் தமிழ் ஒலி வானொலியின் மகத்தான பங்களிப்பு வரவேற்கப்படவேண்டிய ஒன்றாகும்.

நம் அரிய நூல்கள் காவியங்கள் இதிகாசங்கள் சரித்திரவரலாறுகள் போன்றவற்றை ஆக்கங்களாக்கி அந்தப் படைப்புக்களை நம் எதிர்கால சந்ததிகளின் செவிப்புலன்களில் பதியவைத்து அன்றாடநிகழ்வுகளில் ஒரு நாளாந்தப் பயிற்சியாக வானொலியில் ஒலிபரப்பாகும் நல்ல நிகழ்ச்சிகளைக் கேட்கவைத்து அதில் உள்ள நல்ல கருத்துக்களை எடுத்துச் சொல்வதன் மூலம் தமிழின் பெருமைகளை உணரவைக்கமுடியும்.
புலம் பெயர்ந்த நாட்டில் இத்தகையதொரு வானொலி இயக்குவது இயங்கவைப்பது ஒரு இமாலயசாதனையாகும்.

நம் நாட்டின் அவலநிலை, நாம் ஏன் அகதிகளாக்கப்பட்டோம்? நாம் பிறந்து வளர்ந்த மண்ணின் மகிமை, அங்குவாழ்ந்து, கல்விபயின்று உயர் நிலைக்கு வந்து புகழீட்டிய நம் முன்னோடிகளின் சரித்திர வரலாறுகள் நம் மண்ணுக்காய் மண்ணின் விடுதலைக்காய் தம் உயிரையே துச்சமெனமதித்து எதிரிகளுடன் போராடி மடியும் மாவீரர்களின் மகத்தான தியாக சேவை பற்றியெல்லாம் நம் சிறார்களின் கவனத்துக்கு கொண்டு வருவதற்கு இந்த வானொலியின் பங்கு அளப்பரியது. வானொலியில் ஒலிபரப்பாகும் சமயநிகழ்ச்சிகள் மூலம் சமயப்பற்றும் ஏற்படுவதற்கும் வாய்புக்கள் நிறையஉண்டு.

வளமான நம் சிறார்களின் எதிர்கால சுபீட்சத்துக்கு நம் தாய்மொழியாம் தமிழ் மொழியின் மகிமை புரிந்து கருத்துள்ள பலனுள்ள அறிவுபூர்வமான நிகழ்ச்சிகளில் பங்குகொள்வதன் மூலம் பிரகாசமான ஒரு எதிர்கால சந்ததியை உருவாக்கமுடியுமென்பது எனது நம்பிக்கை.

வானொலியும் பெற்றோரும் ஒரு இணைப்புப் பாலமாகச் செயல்பட்டு உங்கள் செல்வங்களின் எதிர்காலத்தை வளம்படுத்துங்கள், இன்றைய இளைஞர்கள் யுவதிகள் நாளைய தலைவர்களாகலாமென்ற நம்பிக்கையை மனதில் நிறுத்தி செயல்படுங்கள்.

இந்த மலர் மூலம் என் ஆதங்கத்தை தெரிவிக்க ஒரு சந்தர்ப்பம் வழங்கிய இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியின் (பிரான்ஸ்) பழையமாணவர் சங்கத்தினருக்கும் இக் கல்லூரி மேலும் மேலும் வளர்ந்து மேலோங்கி பல அறிஞர் பெரும்மக்களை உருவாக்க வேண்டுவதற்குரிய சக்தியினை எல்லாம் வல்ல இறைவன் அருளவேண்டுமென்று மன்றாடி உங்களையும் வாழ்த்தி விடைபெறுகின்றேன்.

உங்கள் கலைஞன்

**அப்புக்குட்டி. T. ராஜகோபால்**

*வானொலிக் கட்டுப்பாட்டாளர்- .T.R.T. Radio Asia*



படிப்பகம்

www.padippakam.com



# SKM COM



## வந்துவிட்டது *'DELTA'* தொலைபேசி அட்டைகள்

ஆமாம் வாடிக்கையாளர்களே! தொலைபேசிச் சேவையில் உங்கள் அனைவரையும் திருப்திப்படுத்தும் வகையில் *SKM COM DELTA TELECOM* ஆகிய இருமாபெரும் ஸ்தாபனங்களின் கூட்டுமுயற்சியால் வெளிவருகின்றது *DELTA* வின் தொலைபேசி அட்டைகள். இது ஓர் அறிமுகமல்ல தொலைதொடர்பு சேவையில் ஓர் புதிய பரிமாணம். வாரத்தில் சனி, ஞாயிறு உட்பட 7 நாட்களும் 24 மணிநேரமும் தெட்டத்தெளிவான தங்கு தடையின்றிய துல்லியமான *DIGITAL* முறையில் இணைப்புகளை *'DELTA'* அட்டைகள் வழங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றேம்.

— எங்கள் *SKM CLUB* ல்சேர்வதன்மூலம் உங்கள் செலவினையே சேமிப்பாக்கிக்கொள்ளுங்கள்.
— தொலைபேசி மூலமும் தொலைபேசி அட்டைகளை கொள்வனவு செய்து கொள்ளலாம்.
— உங்கள் உறவினருடன் அவசரகடித தொடர்புகளை எமது தொலை நகல் (FAX) மூலம் சிக்கனமானமுறையில் அனுப்பவும் பெற்றுக் கொள்ளவும் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.
விபரங்கட்கு ஒருமுறை விஜயம் செய்யுங்கள்! அல்லது தொலை பேசியில் தொடர்பு கொள்ளுங்கள்

*பாரிஸ் முத்து மாரி அம்மன்*
*ஆலயமருகில்*
*SKM COM*

24 Rue de Département
75018 PARIS
*Métro : - La Chapelle*

*Tél : 01 42 05 19 09*
*Fax : 01 42 05 21 42*




படிப்பகம்

www.padippakam.com

கடந்த ஆண்டு இடம்பெற்ற
எமது விழாவின் கலைநிகழ்ச்சிகளிற் சில..










படிப்பகம்

www.padippakam.com



கடந்த ஆண்டு இடம்பெற்ற
எமது விழாவின் கலைநிகழ்ச்சிகளிற் சில..





படிப்பகம்

# ஒன்றிணைவோம்! நல்லது செய்வோம்!!

இலங்கையின் வட பகுதியில் மட்டுமல்ல, நாடளாவிய ரீதியிலும் மிகப் பிரசித்தி பெற்ற கல்லூரிகளில் ஒன்றான இளவாலை புனித ஹென்றி கல்லூரி சம்பந்தப்பட்ட மலர் ஒன்றுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பி வைப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இளவாலை சென். ஹென்றியின் வளர்ச்சியில் உழைத்த கல்விமான்களில் வண. பிதாக்களான ஜீவரத்தினம், மரியாம்பிள்ளை, ஸ்ரனிஸ்லோஸ், பென்ஜமின், பிரான்சிஸ், அன்ரன் ராஜநாயகம் ஆகியோர் இக் கல்லூரியின் உயர்வில் எத்துணை அக்கறை செலுத்தினார்கள் என்பதை யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகையில் துணை ஆசிரியராக நான் சேவை செய்த காலத்தில் அவதானித்திருக்கிறேன். அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற உதைபந்தாட்ட போட்டி ஒன்றின்போது இறுதி ஆட்டத்துக்கு இளவாலை புனித ஹென்றியும், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ்ம் தெரிவான போது ஆங்கில தினசரியான 'டெய்லி நியூஸ்' - «Battle of Saints» என்று புகழாரம் சூட்ட தினகரன் பத்திரிகை 'புனிதர்களின் போர்' என்று புகழ்ந்ததை இப்போது ஞாபகத்தில் பார்க்கிறேன். கல்விச் சேவையில் மட்டுமல்ல விளையாட்டுத் துறையிலும் சென். ஹென்றி புகழ் பெற்று விளங்கியது.

இவ்வித புகழ்ச்சியுடைய இளவாலை சென். ஹென்றி பழைய மாணவர்கள் புலம்பெயர் நாட்டில் அதுவும் பாரிசில் பழைய மாணவர் சங்கம் அமைத்து தங்கள் கல்லூரியின் சேவைகளை நினைவு கூர்வதுடன் மட்டும் நின்றுவிடாமல் ஏனைய கல்லூரிகளின் பழைய மாணவர் சங்கங்களையும் இணைத்து பழைய மாணவர் சங்கங்களின் சம்மேளனம் ஒன்றை ஏற்படுத்தி செயற்பட்டால் தற்போது கல்விச் சேவையினால் பாதிப்படைந்து கொண்டிருக்கும் சகல பாடசாலைகளுக்கும் புலம்பெயர் நாடுகளிலிருந்து இயன்ற உதவிகளை இதன் மூலம் செய்ய வாய்ப்புக்களை ஏற்படுத்தலாம் என்று நினைக்கிறேன்.

அக் காலத்தில் யாழ். இந்துக் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, யாழ். வேம்படி, யாழ் இந்து மகளிர், யாழ். சென். ஜோன்ஸ், யாழ். சென். பற்றிக்ஸ், என்று யாழ். நகரத்திற்குட் பல வசதிகளுடன் புகழ் பரப்பிக்கொண்டிருந்த கல்,லூரிகளுடன் இணையாக போட்டியிடக்கூடிய அந்தஸ்தில் விளங்கிய இளவாலை புனித ஹென்றி, தெல்லிப்பளை மகாஜனா, யூனியன், பருத்தித்துறை ஹாட்லி, மானிப்பாய் இந்து, சாவகச்சேரி இந்து, சாவகச்சேரி டிறிபேர்க், உரும்பிராய் இந்து, சுன்னாகம் ஸ்கந்தா, சுழிபுரம் விக்ரோறியா, வட்டுக்கோட்டை யாழ் கல்லூரி, ஊர்காவற்றுறை சென். அன்ரனிஸ், வேலணை சென்றல் போன்ற கல்லூரிகளையும் அக்காலத்தில் கல்விச் சேவையில் புகழ் பெற்று விளங்கிய கல்விமான்களான ஹன்டி பேரின்பநாயகம், ஏ. ஈ. தம்பர், வண. பிதா ஜீவரத்தினம், சி. சபாரத்தினம், பூரணம்பிள்ளை, எஸ். ஆர். கனகநாயகம், வீரசிங்கம், ரி.பி. ஹட்சன், ரி. ஏச். குறோசெத், வண. பிதா மரியநாயகம்பிள்ளை, நெவின் செல்லத்துரை, ஈ.சபாலிங்கம், பி.எஸ். குமாரசாமி ஆகியோரையும் இச் சந்தர்ப்பத்தில் நினைவு கூரலாம் என நினைக்கிறேன்.

'கிள்ளிக் கொடுப்பது பொருள்
அள்ளிக் கொடுப்பது அன்பு
வாரி இறைப்பது கல்வி' என்று சொல்வதுண்டு.

தமிழ் மாணவர்கள் அகில இலங்கை ரீதியில் தரத்தில் உயர்ந்தவர்கள் என்ற பெயரினை தமிழ் இனம் பெற்றுக்கொண்டதற்கு மேற் குறிப்பிட்ட கல்லூரியும்- ஏன் இங்கு பெயர் குறிப்படத் தவறிய பல சிறிய கிராமங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கும் அதிக பங்குண்டு. சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மாணவர்களை அமுக்குவதற்காக கொண்டு வந்த தரப்படுத்தல் சட்டத்தின் பின்னரும் கூட திறமையான மாணவர்களை வெளிக்கொணர்வதில் மேற் குறிப்பட்ட கல்லூரிகளும் சரி பாடசாலைகளும் சரி ஓயவில்லை என்றே சொல்லலாம். எனவே இந்த வகையில் தரணி எங்கும் தமிழர்தம் தனித் திறனை விளங்க வைக்கும் தரத்துக்கு எம்மை உருவாக்கிய அனைத்து பாடசாலைகளுக்கும் எப்போதும் ஒன்றிணைந்து நல்லவை செய்வோம்.

**எஸ். கே. காசிலிங்கம்**
பாரிஸ், 12.12.1998



படிப்பகம்

**கல்லூரிக்காலத்தில் கால்பந்தாட்ட வீரனாகவும் கடல் கடந்து வந்த பின்னர் நாடகக்கலைஞனாகவும் நாடக எழுத்தும், இயக்கமும் என தன்னை இனம் காட்டி வரும் சின்னக்குட்டி ரி.தயாநிதி தன்னை வளர்ந்து வரும் கலைஞன் என அறிமுகம் செய்து கொண்டு தான் சார்ந்த கலைத்துறை பற்றி எங்கள் கல்லூரி மலரில் பகிர்கிறார்.**



மனித மனங்களை அழகு படுத்தக் கூடியது கலை ஒன்றுதான். இதுவே கலைத்துறையில் நான் கண்டு கொண்ட உண்மையாகும். புலம் பெயர்ந்து வந்து விட்ட நம்மோடு பல கலை உள்ளங்களும், அவர்களை நேசிக்கத் தெரிந்த ரசிக வெள்ளங்களும், கால ஓட்டத்திலே அடிபட்டு வந்த அலைகளாக ஐரோப்பிய நாடுகளில் ஒன்றாக சங்கமித்துக்கொண்டார்கள். இவர்களோடு இச்சிறு கலைஞனும் இத்துறையில் வளரத்துடிக்கும் கனவுகளோடு கால் பதித்தான். தமிழ்பேசும் அனைத்து உள்ளங்களுக்கும் பரீச்சயமான அப்புக்குட்டி ரி.ராஜகோபாலின் தம்பியான இவன் அவரது சாயலையும் குரலையும் வரப்பிரசாதமாக பெற்றிருந்தமையால் இவனால் மேற்கொள்ளப்பட்ட கலைப்பயணத்தில் வரவேற்புகள் காத்திருந்தன. இவனது கலைவாழ்வு என்னும் வரைபடத்தில் எந்தப் புள்ளி வரையில் வளர்ச்சி வரையப்பட்டுள்ளது. என்பதனை ரசிக உள்ளங்களே நிர்ணயிக்க வேண்டும். மனிதனை சிந்திக்கவும், சிரிக்கவும், ஏன் அழவைக்கவும் இந்தக் கலைஞனால் முடியும் என்பதை மறுப்பதற்கில்லை. இன்று உங்களோடு என்னைச் சந்திக்க வைக்கும் இம்மலரானது எனக்கு அறிவுப்பிச்சை போட்ட பாடசாலைகளில் ஒன்றான இளவாலை புனித ஹென்றி அரசர் பாடசாலையின் பழைய மாணவர்களின் முயற்சியின் பிரதிபலிப்பேயாகும்.

எங்கள் ஹென்றி அரசர் பாடசாலையானது பல அறிஞர்களையும், கலைஞர்களையும், விளையாட்டு வீரர்களையும் உருவாக்கித்தந்துள்ளது என்பது கண்கூடு. இது போன்ற அதன் பணி மென்மேலும் தொடரவேண்டும் என்ற பெரு நோக்கினையே மையமாக வைத்து இங்கு பரந்து வாழும் எமது கல்லூரி மாணவர்களை ஒன்றிணைத்து இங்கிருந்து அங்கே தமது பாடசாலைக்கு ஆற்றும் பணியானது வரவேற்று பாராட்டப்பட வேண்டியது ஒன்றாகும். இதுபோன்று இவர்கள் செயற்பாடுகள் எமது ஈழ மண்ணில் கொடிய அரசின் கோரத் தாண்டவத்துக்கு தன்னை இரைகொடுத்திருக்கும் பின்தங்கிப்போன பாடசாலைகளையும் அங்கு கல்விப் பசியால் வாடும் சிறார்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பது என் தாழ்மையான வேண்டுகோளாகும்.

புலம் பெயர் நாடுகளில் தம்மை ஐக்கியப் படுத்தி விட்ட படைப்பாளிகள், கலைஞர்கள், புகலிட வாழ்வில் நாம்

www.padippakam.com

நாளாந்தம் சந்திக்கும் இன்னல்களையும் இங்கே எம்மால் அறுவடை ஆக்கப்பட்ட எதிரி காலத்தூண்கள் காலப்போக்கில் சந்திக்க இருக்கும் பாதிப்புகளிலும் கவனம் வைத்து இவர்கள் விழிப்படையக் கூடியதாக தமது செயற் பாடுகளை நகர்த்த வேண்டும் புதிய சூழல், புதிய வாழ்வு முறை, இவற்றோடு தாமாகத் தேடி அணைத்துக்கொண்ட இயந்திர வாழ்வு, இதற்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறும் எம்மவர் மத்தியில் முது பெரும் சொத்தாக எமது முக்கால கலாச்சாரச் சீரழிவுகள் போன்றவற்றிலும் மிக மிக கவனம் வைத்து செயற்பட வேண்டியது இவர்களது கடமையாகும்.

இவற்றுக்கு மேலால் எம் மண்ணில் கட்டவிழ்த்து விடப்பட்டிருக்கும் இலங்கை அரசின் அராஜகங்கள் அனர்த்தத்தினால் எமது உறவுகள் சந்தித்துக்கொண்டிருக்கும் இடர்பாடுகள் அவலங்கள் போன்ற வற்றை நாம் வாழும் பிரதேசங்களில் சொந்தக் காரர்களுக்கும் தெரிய வைக்கும் நோக்கமாக எமது படையங்கள் பிரச்சார நிகழ்வாகவும் இருக்கவேண்டும் என்பது இன்றைய காலத்தின் கட்டாயம் என்பதை யாரும் மறந்துவிடக் கூடாது.

கலைஞன் எனப்படுபவன் தன்னை முதலில் பக்குவப் படுத்திக்கொண்டு நிறைந்த பணிவு துணிவு பொறுப்பு என்பவற்றை மனதில் நிறுத்தி செயற்பட வேண்டியவனாகிறான். மக்களின் மனதில் நேரடியாக தாக்கங்களை ஏற்படுத்தக் கூடியவனும் இக்கலைஞனே. கலைமாமணி முகத்தார் எஸ்.ஜேசுரட்ணம், திரு A.C. தாசியஸ் போன்ற முக்கால கலைஞர்களை உருவாக்கித் தந்த ஹென்றி அரசர் கல்லூரியின் சிறப்போடு இங்கும் அக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் பல கலைஞர்கள் உருவாக்கப் படுகிறார்கள் என்பதைக் காணக் கூடியதாக உள்ளது. இவர்கள் தமது பாடசாலை என்று மட்டும் ஓர் வட்டத்தினுள் நின்று விடாது சமீப காலமாக பல புனர் வாழ்வு நிகழ்ச்சிகளிலும் மண்ணின் நிகழ்வாக நாடகங்களை மேடையேற்றி வருவது பெருமைக்குரிய விடையமாகும். முகத்தாரின் முத்தான வாரிசுகளான சந்திர மோகன், உதயன், பிரேம் குமார், நவீனம், திருமதி உமா சந்திரமோகன் போன்ற கலைஞர்கள் குறிப்பாக இம்மண்ணில் முத்திரை பதித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்தக் கலைஞர்கள் என்றும் எம்மண்ணில் நினைவுகளோடு பல படைப்புகளில் பங்கேற்று கலை வாழ்வில் மேலும் பல படிகளைத் தாண்ட வேண்டுமென வாழ்த்தி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்

அன்போடு
சின்னக்குட்டி **ரீ. தயாநிதி**



படிப்பகம்

www.padippakam.com


பாரீஸ் மாநகரின் முன்னணி நிறுவமான

றீகல் வீடியோ மூவிஸ் ஸ்தாபனத்தின்

புதிய சேவை ஆரம்பம்



‘தேவி வீடியோ சென்ரர்’

64 Rue Louis Blanc
75010 PARIS

மணவறை, சாப்பாடு, போட்டோ, மண்டபம், பூமாலைகள், குருக்கள் நாதஸ்வரம் ஆகிய வசதிகளுடன் உங்கள் அனைத்து மங்கள வைபவங்களுக்கும் மறவாது நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்

றீகல் வீடியோ மூவிஸ் - பாரீஸ், பிரான்ஸ்

புதிய பழைய வீடியோபடங்கள் வாடகைக்கு பெறவும் வாங்கவும்.

*CD, AUDIO*

TEL : 01 42 05 05 32
01 42 05 16 66
01 48 18 77 35

உரிமையாளர்
தியாகராஜா
சுதாகர்



# பாரிஸ் இளையநிலா





உங்கள் மங்களவைபவங்களுக்கு
அழைத்து மகிழுங்கள்!
பாரிஸ் இளையநிலா இசைக்குழு
தொடர்புகளுக்கு
– குருநாதன் –
01 44 62 74 14 / 06 62 50 57 08




படிப்பகம்

www.padippakam.com









எமது பிரான்ஸ்கிளையினர் சுவீகரித்துக்கொண்ட
வெற்றிக்கிண்ணங்களிற் சில..

www.padippakam.com



## எமது பாடசாலை, எமதுநாடு, எமது மக்கள் என எல்லோரும் ஒருமித்துச் செயற்படுவோம்!

எமது தாயகத்தினைவிட்டுப் புறப்பட்டு வருடங்கள்பல கடந்துவிட்ட இன்றையகாலகட்டத்தில் நாம் எந்தெந்த நாடுகளில் வாழ்ந்தாலும் நாம் தாய்நாட்டைமறவாது இன்று எல்லோரும் இணைந்து குரல்கொடுக்கின்ற இவ்வேளையில் 7வது ஆண்டு நிறைவு விழாவினை கொண்டாடுகின்ற புனித ெ ன்றியரசர் கல்லூரி பழையமாணவர்சங்கத்தினரை நான் மனதார பாராட்டுகிறேன். புலம்பெயர் நாடுகளிலே குறிப்பாக பாரிஸ்மாநகரில் பல பழையமாணவர் சங்கங்கள் இருப்பினும் குறிப்பிட்டுச்சொல்லக்கூடிய பழைய மாணவர் சங்கங்களில் சென். ெ ன்றிஸ் பழைய மாணவர் சங்கமும் அடங்கும். தாங்கள் படித்த பாடசாலையை மறவாது அப்பாடசாலை நன்றாக நடைபெற தங்களால் இயன்ற நிதிஉதவியை வழங்குவதோடு, கல்விச்சேவையில் மட்டுமன்றி கலை, கலாச்சாரம் விளையாட்டு என பல்துறைகளிலும் அப்பாடசாலை முன்னேற இங்கிருந்து இவர்கள் செயற்பட்டுவருவது பாராட்டத்தக்கது. இவர்கள்போல் எல்லோருமே எமது பாடசாலை, எமதுநாடு, எமது மக்கள் என அங்கிருப்போரை மறவாது செயற்படின் வெகுவிரைவில் ஈழத்திற்குச்சென்று வாழலாம்.

புனித ெ ன்றியரசர் கல்லூரி பழையமாணவர் சங்கத்தின் கலைஞர்கள் இன்று பாரிஸில் வானொலி, தொலைக்காட்சி போன்ற சாதனங்களினூடும் பிரகாசித்துவருவதை கல்லூரிக்குப் பெருமைசேர்க்கும் விடயம்..

இச்சங்கமானது தொடர்ந்தும் பலவேறு வெற்றிகளை ஈட்டிச்சிறக்கவேண்டுமென வாழ்த்தி விடைபெறுகிறேன்.

என்றும் அன்புடன்
**இரா. குணபாலன்**
**ஆர். ரி. எம். பிறதேர்ஸ் இன்ரநெஷனல்**

படிப்பகம்

www.padippakam.com

'தமிழாள் கூத்தவை'
95, Rue Des Poissonniers
Paris - 75018 (FRANCE)
21.11.1998

# வேர்கள்

மரம் வளர்ந்து, பூத்து, காய்த்து, கனிந்து சொரிகிறது!
பூவை நுகர்ந்து விட்டு, தூக்கி எறிகிறோம்!
காயைப்பார்த்துக் காத்திருக்கிறோம்!
கனியை பறித்து சுவைக்கிறோம்!
ஆனால்,
அந்த மரத்தை மறந்துவிடுகிறோம்
அந்தமரத்தை நிறுத்தி உயிர் கொடுக்கும் வேர்களையும்
மறந்துவிடுகிறோம்.

இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியின் பழைய மாணவர்கள் தாம் வாழ்ந்த, வளர்ந்த கல்விகற்ற தங்கள் கல்லூரியை மறந்து விடாமல் புலம் பெயர்ந்த நாட்டிலும் வருடம் தவறாது விழா எடுத்து மண்ணில் இன்று தேவைப்படும் கல்விப்பணிக்கு கை கொடுத்து, தாம் அந்த மரத்தின் விழுதுகள் என்பதை மறவாது "வேர்களின்" நலம் விசாரிக்கும் பிரான்ஸ் வாழ் விழுதுகளின் பயணம் பாராட்டப்பட வேண்டிய தொன்றாகும்.

1945 முதல் 1954 வரை, மானிப்பாய் இந்துக் கல்லூரியில் கல்வி கற்றவன் நான். 1947 இல் கல்லூரி நாடகத்தில் அரங்கேறியவன். அந்நாட்களில் உலக நாடக பேராசான் Shakespere பற்றியும் கற்றவன். சிறுவனாக கலைக்கனவுகளுடன் எங்கள் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் நாடகப் பயிற்சி ஆசிரியருடன், இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியில் அரங்கேறிய Shakespere ன் ஆங்கில நாடக வடிவத்தையும் பார்த்துக் கற்றிக்கொண்டவன். 1949 இல் தங்கள் கல்லூரியின் கிறிஸ்மஸ் விழாவில் மேடையேறிய "Le Miserables" French நாடகத்தின் ஓர் ஆங்கில வடிவம் "The Bishop's Caudle Sheks" பார்த்து மகிழ்ந்தவன். அதில் முக்கிய பாத்திரம் ஏற்றவன் வேறு யாருமில்லை. "Convict" ஆக நடித்தவன். உங்கள் 'முகத்தான்' ஜேசு, என் சமகாலக் கலையுலக நண்பன் என்பதில் மகிழ்ச்சியடைகிறேன். பல ஆண்டுகள் பின் அதே கதை 'ஏழைபடும் பாடு' திரைப்படத்தில், மாபெரும் நடிகர் V. நாகையா அதே பாத்திரத்தை ஏற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

வீட்டுக்குத் தெரியாமல் கீரிமலைக்கு சயிக்கிளில் Double போகும் போதெல்லாம், இளவாலைச் சந்தியில் இருந்த சயிக்கிள் கடையில் சற்று தரித்து நின்று, கல்லூரியின் வனப்பையும், நாடகங்களின் சிறப்பையும் சிந்தித்து மகிழ்ந்தவன். இலங்கையில் கலை வளர்த்த கல்லூரிகளில் மானிப்பாய் இந்துக்கல்லூரியும், புனிதஹென்றி அரசர் கல்லூரியும் முதன்மை ஸ்தானம் வகித்தவை, வகிப்பவை என்பது சரித்திரம். அண்மைக்கால போராட்ட காலத்தில் காலத்தின் அவசியத்தை கொண்டு இவ்விரு கல்லூரிகளும் ஒரே இடத்தில் காலை-மாலை என பிரித்து இயங்கிய சிரமமும் காலமும் நாம் அறிந்ததே. மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் என்ற பார்வையில் எங்கள் காலத்திலும் அதற்கு முன்பும் பின்பும் கல்வி விளையாட்டுத்துறை கலை என எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்கிய இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி அதன் புகழ் பெருமைகள் மீழ்வுற வாழ்த்துகிறேன்.

முன்புபோல் கல்விப் பணியாற்றும் காலம் வெகு தூரத்திலில்லை. தமிழ் ஈழ விடுதலைக்கு காலம் அண்மித்து விட்டது. அதுவரை மண்ணை மீட்கப் பாடுபட்டவர்க்கும், கல்விக் கண்ணைத்தர கடமையாற்றியவர்க்கும், துயர்சூழ்நிலைக்கும், புனர் வாழ்வு தேடும் நம் செல்வங்களுக்கும் துணை நிற்போம். அந்த வகையில், வாழ்வு கொடுக்கும் இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியின் பழைய மாணவர்களை எண்ணிக் கல்வி, கலை, விளையாட்டுத்துறை என முன்வரிசையில் அமர்த்தி, மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவனாக, அன்றைய நட்புடன் இன்னும் தொடர்ந்து, வாழ்த்தி, வணங்கி நிறைவு செய்கிறேன்.

என்றும் அன்பன்
**A. ரகுநாதன்**
**(திரைப்பட இயக்குனர்)**



படிப்பகம்

www.padippakam.com




**கார்ஸ் சார்சலில் மலிவு விற்பனை.**
**டிசம்பர் 15 முதல் ஜனவரி 15 வரை**
**அனைத்துப் பொருட்களும் மலிவு விலையில்.**

அனைத்துநாட்டு உணவு பொருட்கள், மரக்கறிவகைகள் கடல் உணவுவகைகள். மளிகைப் பொருட்கள். அலுமினியப் பொருட்கள் எவர்சில்வர் பொருட்கள். எலக்ற்றோனிக் பொருட்கள் இன்னும் பல மலிவுவிலையில் பெற்றுக்கொள்ள

---

# T. V. M. ALIMENTATION

மரக்கறி மலிவான விலையில்

தரமான புதிய ஒறிஜினல் வீடியோ பிரதிகள். பழைய புதிய பாடல்கள் அடங்கிய வீடியோ கசட் ஒடியோ கசட், கொம்பக் டிஸ்குகள் *Cd.* வீடியோ டிஸ்குகள் *(Video Cd)* மாதவார பத்திரிகைகள், சஞ்சிகைகள் அனைத்துக்கும்.

---

# T. V. M. VIDEO

*VIDEO Film 35 fr* இருந்து

அனைத்து நாடுகளுக்கும் உடனுக்குடன் அதிக நேரம் பேசும் தொலைபேசி அட்டைகள்.

இசைத் தென்றல் *VIDEO* கசட் *10 Fr.* இருந்து

உங்கள் வாகனத் தேவைகள் எதுவானாலும் *Car. Van (9Place)* உடன் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

மிக மலிவான கட்டணத்தில் விரைவான சேவை!

---

**இன்றைய நவ நாகரீகத்துக்கு ஏற்றவாறு சிகையலங்காரம் செய்து கொள்வதுடன் கலர் பூசுவதிற்கும் (டை) பலவருட பாண்டித்தியம் பெற்றவர்கள்**

ஒடியோ கசட் *8 Fr.* இருந்து

# T. V. M. SALOON

*CD 20 Fr.* லிருந்து

**T. V. M. SARL** *Alimentation, Video, Saloon*

*604 - 605 Avenue Maurice Thorez*
*95140 Garges Les Gonesse*

*Phone : 01 39 86 95 97*




படிப்பகம்

www.padippakam.com

# யாழ். சென். பற்றிக்ஸ் பழையமாணவர் சங்கம் – பிரான்ஸ்

## *வாழ்த்துரை*

இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி பழைய மாணவர் சங்கம்-பிரான்ஸ், வெளியிடும் இவ்வாண்டு மலரில் ,புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்கம் பிரான்ஸின் சார்பில் வாழ்த்துரை வழங்க எனக்களிக்கப்பட்ட சந்தர்ப்பத்தை இட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எந்தவித வேற்றுமையும் காண முடியாத, நீண்ட கால சகோதர தொடர்புடனான, கத்தோலிக்க பாரம் பரியமுடைய எமது இரு கல்லூரிகளும் யாழ் மாவட்டத்தின் கல்வி மேம்பாட்டுக்கும் அங்கே ஊக்கமுள்ள நற்பிரஜைகளை உருவாக்குவதற்கும் முன்னிலையில் நின்று உழைத்தமையை யாரும் மறுக்க முடியாது. எமது உயிரினும் மேலாக நாம் நேசிக்கின்ற எமது கல்லூரிகள் எமக்களித்த அறிவும், நல்லொழுக்கமும் மாத்திரமல்லாது எம்மூலம் எம் மண்ணின் இளம் சந்ததியினருக்கும் சென்றடைய எம்மால் இயன்றளவு உழைக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து, இருக்கின்ற எமது மண்ணில் வாழும் மாந்தர்க்கு அறிவுப்பசிபோக்கும் அமுதூட்டும் நம் கல்லூரிகளுக்கு உதவிக்கரம் நீட்டி ஆதரவு வழங்க திட சங்கர்ப்பம் கொள்வோமாக! இதற்காக புலம்பெயர் நாடுகளில் வாழும் நாம் அனைவரும் தூரநோக்கு சிந்தனையுடன் ஒன்றிணைந்து எமது கல்லூரிகளின் வளர்ச்சிக்காக உழைக்க முன்வர வேண்டும்.

இதனை இம் மலரினூடாகக் கூறி, இம்மலர் பூத்து மணம் பரப்பி அனைவர்க்கும் மகிழ்ச்சி ஊட்ட வாழ்த்துவதுடன், புனித ஹென்றி அரசர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் பிரான்ஸ் கிளை தொடர்ந்தும் சிறப்புடன் இயங்கி வளர்ந்தோங்க வாழ்த்துகிறோம்.



அன்புடன்
**அ.வ. டேமியன் (சூரி)**
செயலாளர்



படிப்பகம்



# Restaurant TAMOUL ARUVI

## தமிழ் அருவி உணவகம்

*SPECIALITES INDIENNES ET TAMOULES*

வைபவங்களுக்கான சாப்பாடு ஓடர்களும், மண்டபவசதியும்
ஒழுங்குசெய்து தரப்படும்

*54, Rue Marcadet*
*75018 PARIS*

*Tél : 01 42 55 47 23*
*M° : Marcadet Poissonniers*

*(Ouvert tous les jours de 10 h30 à 23h00*

# RESTAURANT - BAR

## L'entrecote

Grillades, repas, d'affaires
Location de salle
*un accueil chaleures vous sera réservé.*

**இதில் 130 பேர் கொண்ட விழா மண்டபம் வாடகைக்கும் உண்டு**

7, Rue Christino Garcia
93120 La Courneuve

Tél :01 48 37 74 41

www.padippakam.com

# மகாஜனக் கல்லூரி பழையமாணவர் சங்கம்
# - பாரிஸ் -

## வாழ்த்துச் செய்தி

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியின் பாரிஸ் பழைய மாணவர் சங்கத்தின் ஆண்டு விழா மலருக்கு தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் பாரிஸ் கிளையின் சார்பில் வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமைப்படுகின்றோம்.

புனித ஹென்றியரசர் பழையமாணவர்கள் அக்கல்லூரியின் கல்வி விளக்கை அணையாது ஒளி வீசச்செய்வதில் அயராது உழைத்து வருவதையிட்டு மகிழ்ச்சியும், பெருமிதமும் கொள்கிறோம். செல்வமோ நிலையற்றது. வாழ்க்கையும் நிலையற்றது. ஆனால் கல்விச் செல்வம் ஒன்றே நிலையானது.
எமது நாட்டைப்பொறுத்தவரையில் பதியிழந்தனம் நிதியிழந்தனம் இயங்கிவந்த கல்லூரிகளையும் இழந்தனம். மாணவர்களும் ஆசிரியர்களும் அகதிகளாக அலையும் நிலையை அடைந்துள்ளனர். இங்குள்ள நாம் கையாலாகாத நிலையில் கதி கலங்கும் வேளையிலும் பாரிஸ் ஹென்றி அரசர் பழைய மாணவர்கள் ஆண்டு மலரை அழகுற வெளியிடுவது எமக்கு உற்சாகத்தையும் புதுத்தென்பையும் தருகிறது.

எது இழந்தாலும் எமக்கு கைகொடுப்பது கல்வி ஒன்று தான். எமது பாடசாலைகள் கிராமங்களில் இருந்தாலும் கல்வித்தரத்தில் நகர்ப்புறப்பாடசாலைகளை விட மேன்மையாக இருக்கின்றன. புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் எமது பழைய மாணவர்கள் சங்கங்கள் மூலம் எமது சிறார்களின் கல்வி வளரச் செயற்படுவதே நாம் படித்த கல்லூரிகளுக்கு நாம் செய்யும் நன்றிக்கடனாகும்.

பாரிஸ் வாழ் பழைய மாணவர்களின் பணி சிறக்க வாழ்த்துகிறோம். சங்கம் மேலும் வளர்ந்து நிறைவான சேவையாற்ற நன்றியும் பாராட்டுக்களும் உரியனவாகுக.

**யோ. சிவலிங்கம்**
(தலைவர் - ம. ப. மா. ச.)



படிப்பகம்

www.padippakam.com

*J/ILAVALAI CONVENT MAHA VIDYALAYAM*
*ILAVALAI.*

பழைய மாணவிகள் சங்கம்
(பிரான்ஸ் கிளை)



எண்ணங்கள் ஆயிரம் உதயமாகட்டும்!
தொண்டுகள் வானளாவ வளரட்டும்!!
-அத்தனையும்-
காலங்கள் வழ்த்தும் காவியமாகட்டும்!!!

இதய பூர்வமாக வாழ்த்தும்
இளவாலை திருக்குடும்பக் கன்னியர்மட (ம.வி)
பழைய மாணவிகள் சங்கம்
(பிரான்ஸ் கிளை)



# PILLLAYARS MALIGAI

Alimentation Générale & Epicerie
Indo Srilankaise

வாகன சேவைகளுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய
தொலைபேசி இல : **01 49 46 98 72**

245, Avenue Président Wilson
93210 La Plaine Saint Denis
FRANCE

Tél.: 01 49 46 98 72



படிப்பகம்

www.padippakam.com

# சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி பழையமாணவர் ஒன்றியம்
## பிரான்ஸ்

"கற்க கசடற கற்றவை கற்றபின்
நிற்க அதற்குத் தகவென்று அறிவித்து
சொற்கடலீந்த முப்பானூலர்
பொற்பதம் பற்றியே பயனடைவோமே"

இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி பழைய மாணவர்கள் ஒன்றுகூடிச் சமைத்த தங்கள் சங்கம், மற்றைய கல்லூரி பழைய மாணவர் சங்கங்களுக்கு இணையாக செயற்பட்டு வருவதை எண்ணி மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

தாயகத்தின் சொல்லொணாத்துன்பங்கள் மத்தியில் செல்வத்துள் வேறான செல்வமாம் அந்தக் கல்விச் செல்வத்தை அடையத்துடித்து நிற்கும் இளமைச் சிறார்களின் எதிர்கால நம்பிக்கை நட்சத்திரமாகவும், மேலாக கல்லூரி வளர்ச்சியின் முதுகெலும்பாகவும் திகழ்ந்து நீங்கள் ஆற்றிவரும் சேவையை கல்வியுலகம் என்றும் மறவாது.

எங்கள் முதாதையர் சோம்பிடாதிருந்து எங்களையும் எங்கள் கல்லூரிகளையும் தம் இரு கண்களாகப்போற்றி வளர்த்ததன் பயனை இன்று நாம் குறைவின்றி அனுபவிக்கக் கூடியதாக இருக்கிறது. இவ்வேளையில் நாமும் அதை மறவாமல் எங்கள் உளம் நிறைந்த பங்களிப்பை எமது கல்லூரிக்கும் இளைய தலைமுறையினருக்கும் வளங்க கடமைப்பட்டவர்கள் என்ற உள்ளார்ந்த மன அடிப்படையில் நாமெல்லாம் ஒன்றிணைந்து எமது தாயகத்தின் சகல மாணாக்கர்களையும் கல்வித் தாயின் குபேரப் பிள்ளைகளாக்கி உலகினை ஆள வகைசெய்ய திட சங்கர்ப்பம் பூண்டு கொள்வோம்.

இந்த வருடத்து தங்களது கல்லூரித் தினவிழா சிறப்புற இனிதே நடைபெற எங்களது வாழ்த்துக்கள்.

**– என். யோகரத்தினம்**
தலைவர்



படிப்பகம்

www.padippakam.com




# HAPPY MALIKAI

# ஹப்பி மாளிகை

தரமான VIDEO ,AUDIO கசற்றுகளுக்கும் மற்றும்
மரக்கறி மீன், மளிகைப் பொருட்களுக்கும் நீங்கள்
நாடவேண்டிய ஒரே ஸதாபனம்

**HAPPY MALIKAI**

வெகு விரைவில் HAPPY MALIKAI யின்
சகோதர நிறுவனமான **HAPPY CAFE**
**101 Rue de L'Ouest** ல் ஆரம்பமாக இருக்கின்றது
என்பதனை எமது இனிய வாடிக்கையாளர்களுக்கு
அறியத்தருகின்றேம்.

***HAPPY MALIKAI***

**ஹப்பி மாளிகை**

**Tél. 01 45 39 20 63**

*102, rue de l'Ouest*
*75014 PARIS*

Metro : Pernity ou
Plaisance
Autobus : 62

மேலும் உங்கள் தேவைகளுக்கான
வாகன சேவைகளுக்கும் நீங்கள் நாட வேண்டியவர்
ராஜன் : **06 87 06 04 20**




படிப்பகம்

www.padippakam.com

# பாட்டும், பரதமும், பண்புள்ள நாடகமும், நாட்டுக்கு நல்ல பலம் தரவேண்டும்!

இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியின் அன்பு நெஞ்சங்களுக்கு!

ஆண்டு தவறாமல் தாங்கள் எடுத்து வரும் ஒன்று கூடலும், ஒளிவிழாவிலும் தவறாது கலந்து கொள்பவர் என்ற ரீதியில் தங்கள் மலருக்கு என் காணிக்கை!

இளவாலையை ஒரு முறை திரும்பிப் பார்க்கும்போது பரிணமிப்பது, அந்த மண்வாசனைக் கலைஞர்களே! இளவாலையில் நாட்டுக் கூத்து இடம் பெறுகிறதென்றால், கிறகோரி முன்வரிசையில் இரவு முதல் விடியும் வரை களித்திருப்பவன்.

சஞ்சுவாம் நாட்டுக்கும், எஸ்தான்னியர் நாடகம், ஞானசவுந்தரி நாடகம், போன்ற நாட்டுக் கூத்து வடிவங்களையும் பூத்தான்யோசேப்பு ஐயா, மனுவேல்பிள்ளை அண்ணை (சிவலையர்), தேவ சகாயம் அண்ணை, சின்னத்தம்பி அண்ணை போன்ற பல கலைஞர்கள் இன்றும் மறப்பதற்கில்லை. அரச விருத்தம் அள்ளி எறிய, கல்வெட்டு கனல பறக்கும்! இத்தனையும் அந்த நாள் ஞாபகங்கள்.

ஒவ்வோர் நாட்டுக்கும் தனித்துவமான, உரித்தான, சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்படும் கலைவடிங்கள் உள்ளன. உதாரணமாக English Theatre, American Theatre, Russian Balle, Japanese Kabukki, Baratha Natya போன்ற கலைவடிங்கள், அந்தந்த நாட்டுக்கேற்ப, உரித்தான, தனித்துவமான, சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கலை வடிவங்கள் எம்மவர்க்குரித்தான, எமது மரபு வழிவந்த வடிவங்கள் எது? எமது, வடமோடி தென்மோடி நாட்டுக் கூத்து வடிவங்கள் இது என் கருத்துக்கள் மட்டுமல்ல, பலரின் கணிப்புகளும் அதுவே!

வானெலியும், மேடையும், தொலைக்காட்சியும், திரைப்படமும் இந்தக் கால கட்டத்தில் எம்மை ஆட்கொண்டிருந்த போதும் எமது மரபு வழி வந்த நாட்டுக்கூத்தினையும் நாம் வரைந்திடல் வேண்டும் திருமறைக் கலாமன்றத்தின் படைப்புகளில் தங்கள் கல்லூரியின் பழைய மாணவர்கள் சிலர் பிரகாசிப்பதும், கல்லூரிக்குப் பெருமையே. குறிப்பாக பல்குரல் மன்னன், கலைச்சிற்பி
திரு T. சாம்சன் அவர்களுக்கு என் பாராட்டுகள்.

தங்கள் சங்கம் விழாக்கள் எடுக்கும் வேளைகளில், எமது பாரம்பரிய கலை வடிவங்களில், நாட்டுக் கூத்து, கோலாட்டம், வில்லுப்பாட்டு, பரத நாட்டியம், கும்மி போன்றவற்றினை ஊக்கிவிக்க *முடியுமானால்*, எம் இளம் தலைமுறைகள் திசை மாறிய பறவைகள் ஆகிவிடாமல் தடுத்துவிட முடியும் எனக் கூறிவைக்க விரும்புகிறேன்.

தங்கள் சேவை வாழ்க! வளர்க வளமுடன்!!

வாழ்க தமிழ்!

வளர்க கலை!!

**- டி. கிறெகரி தங்கராஜா**
**பாரிஸ் கலைக்கோயில்**



படிப்பகம்

www.padippakam.com

## இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி பழைய மாணவர் சங்க பாரிஸ் கிளையினர் கல்விக்கும், கலைக்கும், மண்ணுக்கும் ஆற்றும் பணி தொடர்க

ஈழத்துக் கலையுலகில் புகழ்க்கொடி நாட்டி நிற்கும் ஈடிணையற்ற கலைஞர்கள் பலரை தந்து நிற்பது இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி என்பது பெருமைக்குரியதே!

இன்று தாயகத்திலும், புலம் பெயர் நாடுகளிலும் இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி பழைய மாணவர்கள் ஆற்றும் பணி பாராட்டுக்குரியது. குறிப்பாக பாரிஸ் கிளையினர் சிறப்புப் பாராட்டுக்குரியவர்கள். எமது தாயக மண்ணில் அவலங்களுக்கு எதிராக குரல் எழுப்புவதிலும், அல்லலுறும் மக்களின் துயர் துடைக்கத் தம் பணிகளை ஆற்றுவதிலும் இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி பழைய மாணவர் சங்க பாரிஸ் கிளையினரின் பங்களிப்பு ஏனைய சங்கங்களைக் கூட சிந்திக்க வைத்திருக்கிறது.

சங்கங்கள் அமைப்பது பெரிதல்ல, அவை உள்ளடக்கும் நோக்கங்கள் மண்ணிற்கும், மக்களுக்கும் உபயோகமுடையவையாக அமைதல் வேண்டும்.

அந்த வகையில் அமைந்து கொண்ட நோக்கங்களை நோக்கிய நேரான பயணத்தில் நேர்த்தியாக செயல் பட்டுக்கொண்டிருக்கும் இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி பழைய மாணவர் சங்க பாரிஸ் கிளையினர், சொந்த மண்ணில் சுகமிழந்து, சுற்றமிழந்து, உறவிடமிழந்து, ஊர் பெயர்ந்து வாடும் மக்களுக்கு உதவிகள் புரிவதில் உயர்ந்து நிற்கிறார்கள்.

தாயகத்திற்கும், தமிழ் கலைக்கும் இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி பழைய மாணவர் சங்க பாரிஸ் கிளையினரின் பணி மேன்மேலும் சிறப்போடு தொடர வேண்டும்.

தமிழ் மக்களின் தனிப்பெரும் செல்வமான கல்விச் செல்வம் காப்பாற்றப்பட இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினர் தங்கள் செயல்ப்பாடுகளை முன்னெடுத்துச்செல்ல இன்றைய அவர்களின் ஏழாவது ஆண்டு நிறைவு விழாவின்போது மகிழ்ச்சி அடைகிறேன்.

நன்றி

**எஸ். கே. ராஜென்**
இயக்குனர்
**ஐரோப்பா தமிழ் கலையகம்**

**ஒலிபரப்பாளர்**
**அனைத்துலக ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்**
**தமிழ்**
27.12.1998



படிப்பகம்

www.padippakam.com

## MESSAGE FROM THE OLDEST LIVING HENRICIAN

*The old boys of St. Henry's College, Ilavalai are in various walks of life in various parts of the world. Many of them are distinguished in their own fields thus bringing honour to their Alma Mater. They have also formed branches of the Old Boys Association in various countries and thus show their loyalty and affinity to their old school.*

*The Old Students Association France is in no way second to its sister branches. This is due to the able guidance of the President Mr. S.Jesu Ratnam.*

*I wish them more success in the future.*
*I Hope all Hentricians will continue to support their Alma Mater for her to keep growing and produce more and more Henricians.*

**S. Vaithianathan**
*Ex-Teacher (1918-1959)*



## கல்வியே கண்ணாகும்

அறிவுக்கு உரைகூறும் அனைவரும்
அளித்தவை எல்லாம் கல்விக் கண்
அறிந்து நடப்பதென்பதாகும்-ஹென்றி
அரசர் இலங்கை புகழ் கல்லூரியாகும்!

மண்ணிடை ஆடும்மாணவர்-என்றும்
கண்ணிடை நில்காலத்தின் சொத்தாகும்!
பண்ணோடு எழில் சேர் புலவர்கள்-புகழ்
மண்ணோடு கலந்தாடும் ஆசான்கள்-இன்று
கல்விக் கண்ணை திறந்தாடும் அரசர் விழா!

ஹென்றி கல்லூரியின் ஆண்டாகும்-இவ்
வேளையில் தேசமும் தேசியமும் முதுவுறவே
போதித்த அருமைச் செம்மல்கள் நிதமுறவே
இளவாலை மண்வாசனை கமழவே துதிப்போம்!

புதிய மாணவர்கள் பழைய மாணவர்கள்-இன்றும்
புதிதாய் புகழ் பெறும் மாணவர்கள்-பயிலும்
நிகள்புகழ் கல்விக் கூடம் பலரைத்-தினமும்
பயிரின் அறுவடையாகத் தந்து கொண்டாடும்!

எழுதும் எண்கோல் இளவாலை அரசர்
கல்லூரியைத் தொழுதே எழுத்தாடும்
வீட்டை விட்டு நம்நாட்டை விட்டு-வந்த
நம்தமிழர்-முன்-இவ்விழா சிறந்தாடும்!

வந்தோரே புகழ்சேர்நிகழ்
புகழ் பாடவேஎழிலாடும் என்கவியாடவே
ஏற்ற பொருளாகி எல்லோரும் மகிழ்ந்தாட
வாழிய ஹென்றி அரசர் கல்லூரியின்
பழைய மாணவர் சங்க ஆண்டு விழாவும்

- **மா.கி.கிறிஸ்ரியன்**

01.12.1998



படிப்பகம்

www.padippakam.com



லாச்சப்பல் மெத்ரோ நுழைவாயிலில்
மிக பிரமாண்டமான பல்பொருள் அங்காடி



# கோபால் அன் கொம்பனி சுப்பமார்சே

**Tél : 01 53 26 09 25**
**Fax : 01 53 26 09 26**

*காலை — 9.00 மணி தொடக்கம்,*
*இரவு — 10 மணி வரை*



# ஸ்ரீ நாகபூசணி

## SRI NAGAPOOSANIY

ஓடியோ. வீடியோ கசற்றுக்கள். புடவை வகைகள் மற்றும்
மளிகைப்பொருட்கள் அனைத்திற்கும்

49, Rue Marcadet
75018 PARIS

Tél & Fax. 01 42 54 99 05
M° : Marcadet Poissonniers



படிப்பகம்

www.padippakam.com

## இளவாலை புனித ஹென்றி அரசர் பழைய மாணவர் சங்கத்தினருக்கு

## உரும்பிராய் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்

பெற்ற தாயையும், பிறந்த பொன்நாட்டையும் போற்றிக்காப்பது போல, கற்ற கல்வியையும் கற்றுவந்த கல்லூரியையும் மேலாகப் போற்றி, புலம் பெயர்ந்த மண்ணிலும் அதற்கு சங்கமமைத்து, கல்லூரிக்கும், மாணவருக்கும் செயற்பட வேண்டிய உடனடி, நீண்ட நோக்குத்தேவைகளை அவ்வப்போது காட்டாற்று வெள்ளம்போல வாரி வழங்கி தங்களை, தங்கள் சங்க அங்கத்தவர்களை நிரூபித்துக் காட்டும் இச்செயல் சகல மட்டத்திலும் பாராட்டப்பட வேண்டியது. தங்கள் கல்லூரியின் நூறாவது ஆண்டு நிறைவு விழாவை நோக்கிய பயணத்தில் இவ்வருட நிறைவு விழா கொண்டாடப்படுவதில் தாங்கள் அடையும் புளகாங்கிதத்தில் நாமும் பங்குகொண்டு தங்களுக்கும் தங்களைச்சார்ந்த சகலருக்கும் நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம்.

**சிவலிங்கம் சிவபாலன்.**

# கடமைகள் என்றும் கனப்பதில்லை

நாற்றுள்ள வயல்களுக்கு நல்லதே
நீரிநோடம் அதுபோல் நம் கல்வி
கற்றுணரும் நம் கிராமப்பயிர்களுக்கு
கூட உதவுவதே கூடிடும் கடமை

கல்விச் செல்வம் கிடையாச் செல்வம்
குவலய மாந்தர் குன்றிடை ஒளியாய்
நால் திசையேகிட உதவிய கல்வியை
நித்தியம் தொழுது வகையறிவோமே

கல்வி கொடுத்தவன் கண் கொடுத்தவனே
கண்கொடுத்தவன் கடவுளின் தருவே
நல்வினை கொண்ட நயம் தரு சொல்லிது
நம் முன்னோர்கள் இயம்பிய சொல்லிது

புலம் பெயர் மண்ணிலும் கற்றதை மறவாது
ஹென்றியின் நிலை உயர ஏற்ற உம்முயற்சியை
சீலம் போற்றிடும் சீரிய உம் செயலதை
சிந்தையில் நிறுத்தியே அக மகிழ்கின்றோம்

இளவை யூர் தனிலே இன்னும் எத்தனை
இளநிலைப்பள்ளிகள் ஆதரவு தேடியே
இதைக்கும் உம் உதவிகள் தேவையன்றோ
இவையும் உம் பெயர் சொலிவிட வைப்பீர்

ஏந்திய கரமதில் எழுது கோலில்லையெனில்
உயர்ந்திடுமோ அவர் வாழ்வு, இந்த
மந்திய வறுமையும் அவரும் சிறக்க
முந்திட வேண்டும் உம் கரம் நிலையாய்

அங்கமகன்று, ஆறுதலகன்று போருள்
அல்லல் பட்ட ஆயிரம் உறவுகள்
உங்கள் பார்வையை எதிர்பார்த் திருப்பார்
உள்ளத்திலவரையும் எண்ணிக்கொள்வீர்.

**- சிவலிங்கம் சிவபாலன்**



படிப்பகம்

www.padippakam.com


# AMV

## OVERSEAS'S

## IMPORT - EXPORT

மரக்கறி, மீன் வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

208, Rue du Fg. St. Denis
75010 PARIS

**Tél : 01 44 72 91 25**
**Fax : 01 44 72 91 30**




படிப்பகம்

www.padippakam.com

# ஈழத்தமிழர் உதைபந்தாட்டச் சம்மேளனம் - பாரீஸ்

யாழ் புனித ஹென்றி அரசர் கல்லூரி பழையமாணவர் சங்கம்-பிரான்ஸ் கிளையினரின் 7-ம் ஆண்டு நிறைவு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சி அடைகிறோம். புலம் பெயர்ந்த நாடுகளிலும் எமது தாயகத்தின் கல்விச் செல்வத்தினை பேணி வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டு பல சிரமங்களின் மத்தியிலும் பழைய மாணவர் சங்கங்கள் உருவாக்கப்பட்டு இயங்கி வருவது போற்றுதற்குரியதாகும். நாம் கற்ற கல்லூரிகளின் நினைவுச்சின்னங்களாக மட்டும் இவற்றைக் கருதாது. ஈழத்தில் சீரழிந்து கொண்டிருக்கும் எமது மக்களின் கல்வியினை புனரமைக்கும் உன்னத சக்தியாக செயற்படும்போதுதான் இத்தகைய சங்கங்களின் நோக்கம் அர்த்தமுள்ளதாக அமைய முடியும். இந்த வகையில் புனித ஹென்றியரசர் பழைய மாணவர் சங்கமானது நாட்டின் கல்வி நிலையினை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு பழைய மாணவர்களை ஒன்று திரட்டி முன்னேற்ற கரமான செயல் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. ஈழத்தில் நடைமுறையிலிருக்கும் பொருளாதாரத் தடைகள் மத்தியிலும் யுத்தமேகச் சூழல் மத்தியிலும் பல கஷ்டங்களை எதிர் நோக்கியிருக்கும் தமது கல்வி நிலையத்துக்கு அதன் தேவையறிந்து சகல வழிகளிலும் உதவி புரிந்து வருவது பாராட்டுதற்குரியது. அந்நிய நாடுகளில் வாழும் அனைத்துக் கலூரி பழைய மாணவர் சங்கங்களும் இதுபோன்ற முயற்சிகளில் ஈடுபடுவார்களாயின் "தரப்படுத்தல்" (Standardisation) திட்டம் முதல் இன்று வரை திட்டமிட்ட ரீதியில் எமது மாணவர்களின் கல்வியை சீரழிக்க முற்படும் சக்திகளின் முயற்சிகளை முறியடித்து எமது மக்களின் முதுகெலும்பாக விளங்கும் கல்வியை மேம்படுத்திக்கொள்ள முடியும்.

புனித ஹென்றி அரசர் பழைய மாணவர் சங்கம்-பிரான்ஸ் கிளையினரின் மற்றுமொரு செயற்பாடாக விளையாட்டுத்துறையை குறிப்பிடலாம். ஈழத்திலேயே புனித ஹென்றிஅரசர் உதைப்பந்தாட்ட அணி என்று சொன்னால் அதை அறியாதவர்கள் இருக்க முடியாது. பிரான்ஸ் நாட்டில் கூட பழைய மாணவர் சங்க அணியினர் கடந்த 5 வருடங்களாக இயங்கிவரும் ஈழத்தமிழர் உதைப்பந்தாட்ட சம்மேளனத்தில் அங்கத்துவம் பெற்று போட்டிகளில் பங்கு பற்றி தமது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றனர். அத்துடன் சம்மேளனத்தின் சகல நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்பு வழங்கி விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை, புரிந்துணர்வு, ஏனைய கழகங்களுடனான சகோதர உணர்வு போன்றவற்றை கடைப்பிடித்து ஏனையோருக்கு முன்மாதிரியாக இருப்பதை குறிப்பிடாமல் இருக்க முடியாது. கடந்த வருடங்களை விட இவ்வருடம் இளைய தலைமுறையினர் இவ் அணியில் கூடியளவு பங்குபற்றி வருவது எதிர்காலத்தில் இவ்வணியை வெற்றிப்பாதையில் இட்டுச்செல்லும் என நம்புகின்றேன். விளையாட்டு வீரர்கள் மென்மேலும் விளையாட்டு விதிகளை நன்கறிந்து ஆட்டத்தின் உயிர் நாடியை (Spirit Of The Game) புரிந்து, போதியளவில் பயிற்சி பெற்று போட்டிகளில் சிறந்த முறையில் விளையாடி வெற்றி பெற வாழ்த்தி நிற்கின்றேன்.



**M. RONY**



படிப்பகம்

www.padippakam.com

யா / இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் — பிரான்ஸ் கிளையை

**வாழ்த்தும்**

**JEEVA VIDEO**

"Jeeva Alimentation"
44, Avenue Pierre Semard
95400 Arnouville-Les-Gouesse
RER - D

உங்கள் இல்லத்திற்குத் தேவையான அனைத்து மளிகைப் பொருட்களும் தரம் குன்றாது மலிவு விலையில்....

குளிர்பானங்கள் — மதுபானங்கள்,
வாரந்தோறும் இறக்குமதிசெய்யப்படும்
மரக்கறிவகைகள்
— கடல்உணவு வகைகள்...

இனிய கீதங்கள் அடங்கிய தமிழ் — ஹந்தி ஒடியோ, காம்பக்ட் டிஸ்க்குகள்,
ஒறிஜினால் விடியோ கசற்றுக்கள் வடகைக்கும், விற்பனைக்கும்....

நீங்கள் விரும்பிய சுத்தமான சுவையான, இலங்கை இந்திய வியட்நாம்
உணவு வகைகளை உண்டு மகிழ்ந்திடவும்
உணவு வகைகளை தயாரித்தும் பெற்றுக்கொள்ளவும்

சர்வதேச தொலைபேசி அட்டைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள நாடுங்கள்...

Villier - Le Bel

**JEEVA VIDEO** ALIMENTATION GENERALE

# ROYAL SNACK BAR

## றோயல் சிற்றூண்டிச்சாலை

சிற்றுண்டியின் சிகரம் றோயல்

இலங்கை இந்திய சிற்றுண்டிகளை சுவைத்து மகிழ்ந்திட
றோயல் சிற்றுண்டிச்சாலை

உங்கள் அனைத்து வைபவங்களுக்குமான
அனைத்து சிற்றுண்டிகளும் மலிவு விலையில்
செய்து தரப்படும்.

சிற்றுண்டியின் சிகரம் றோயல்

சிற்றுண்டியின் சிகரம் றோயல்

தொலை பேசி : 01 40 36 41 21
*58, Louis Blanc, 75010 - PARIS*
*M° : GARE DU NORD ou LA CHAPELLE*



படிப்பகம்

www.padippakam.com

KOL
DECORS S.A.R.L

ELECTRICITE
DEPANAGE

QUINCAILLERIE
DROGUERIE
PLOMBERIE
PEINTURE

Represente par :

*210, rue du Faubourg Saint - Denis, 75010 PARIS*
*Tél : 01 46 07 56 06 - Fax : 01 46 07 49 84*

MALA

**மலிவுக்கு மறுபெயர் மாலா**

22, rue Labat, 75018 Paris
**Tél: 01 42 62 01 23**
M°: Marcadet Poissonniers

88-90, Passage Brady,
75010 Paris
**Tél: 01 42 46 26 79**
M°: Chateau d''Eau

2, Place Roger Salengro
95100 Garges les Gonesse
**Tél: 01 39 93 93 48**
RER: Garges Sarcelles



படிப்பகம்

www.padippakam.com

# எங்கள் சிறார்கள் எழுதுகிறார்கள்...

## எங்கள் அதிபர்

தலைமைத்துவப் பண்பு ஒருவருக்கு இயற்கையாகவே அமைந்த ஒன்று என்பதற்கு உதாரணமாக விளங்குபவர் எமது கல்லூரி அதிபர் வண.பிதா.யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் அடிகளாவார்.

கம்பீரமான தோற்றம், கவரும் பேச்சு, எல்லோரையும் திறமையான முறையில் கட்டியாளும் தன்மை, முகாமைத்துவத்திறன் இவை அனைத்தும் அவரிடம் இயற்கையாகவே காணப்படுபவை. 1976 ஆம்ஆண்டு ஆனி மாதம் 1-ம் திகதி நமது கல்லூரியில் உப அதிபராகப் பதவியேற்று கல்லூரி மண்ணில் காலடி எடுத்து வைத்தார். அவருடைய இப்பதவிக்காலத்தில் எமது கல்லூரி கல்வி, கலை, கலாச்சாரம், விளையாட்டுத்துறை, ஒழுக்கம் இவைபோன்ற சகல துறைகளிலும் ஒரு உன்னத நிலையை நோக்கி வீறு நடை போடத்தொடங்கியது.

பாடசாலை விடயங்களில் மிக ஆர்வத்துடன் செயற்பட்டு வந்த எமது அதிபர் உப அதிபராக பதவி வகித்த காலத்தில் இங்கிலாந்துக்குச் சென்று “ஹல்” பல்கலைக்கழகத்தின் முதுமானிப்பட்டத்தினையும் ”சதாம்ரன்“ பல்கலைக்கழகத்தில் கலாநிதிப்பட்டத்தினையும் பெற்றார். மீண்டும் வந்து எமது கல்லூரியின் அதிபர் பதவியை ஏற்றுக்கொண்டு இன்று வரை பாடசாலையின் முன்னேற்றத்தில் ஆர்வத்துடன் ஈடுபட்டு கல்லூரி வளர்ச்சிக்காக உழைத்து வருகிறார்.

பாடசாலையை தமது வீடாகக் கருதி ஆசிரியர்களையும், மாணவர்களையும் தனது பிள்ளைகளாக எண்ணி சேவையாற்றி வருகிறார்.
ஆசிரியர்களின் துன்பங்களையோஅல்லது மாணவர்களின் துன்பங்களையோ தனது துன்ப துயரமாக எண்ணிக்கொண்டு அவர்களுக்கு உதவும் மனப்பாங்கு அதிபரிடம் நிறையக் காணப்படுகிறது. ஓர் அதிபர் என்ற நிலையிலிருந்து இறங்கி ஆசிரியர்களுக்கு ஆறுதல் கூறும்போது உற்றதோழன்போல் காணப்படுகிறார். அவரிடம் காணப்படும் மற்றும் ஓர் இயல்பு மற்றவரின் மன நிலையை உடனே புரிந்துவிடுவதாகும். இப்படிப்பட்ட பண்புகளை நாம் எல்லோரிடமும் காண முடியாது.
கல்லூரியில் ஒரு விழா நடப்பதானால் ஆசிரியர்களைக் குழுக்களாகப் பிரித்து அவரவர் திறமைக்கேற்ப பொறுப்புகளை வழங்கி விடுவார். கொடுக்கப்பட்ட பொறுப்புகள் நிறைவேறி விட்டனவா? எனக்கேட்பது அவர் நிர்வாகத்தில் கிடையாது. அந்தளவுக்கு ஆசிரியர் மீது அவருக்கு நம்பிக்கை அதிகம். அவ்வண்ணமே ஆசிரியர்களும் அவர் அன்பிற்கும் ஆளுமைக்கும் அடிபணிந்து அவர் கொடுத்த பொறுப்புகளைச் சிரமேற்கொண்டு எதிர்பார்த்ததை விட மிக மிக சிறப்பாகச் செய்து முடிப்பார்கள். இவரது சேவைக்காலத்தில் கல்லூரியினது உதைப்பந்தாட்ட அணி தொடர்ந்து மாவட்ட மட்டச் “சம்பியன்” இடத்தை வென்றெடுத்து வருகிறது.

எமக்கெல்லாம் நல்ல அதிபராக அருமைத்தந்தையாக மதிநுட்பம் வாய்ந்த மந்திரியாக அன்புச் சகோதரராய் விழங்கி எம்மை வழிநடத்தி வரும் எமது அதிபர் எதிர் வரும் புதன் கிழமை தனது ஐம்பதாவது அகவையை நிறைவு செய்கிறார். இத் தினத்தை எமது கல்லூரி அகம் குளிரும் வண்ணம் தொடர்சியாக அவர்சேவை மேன் மேலும் சிறந்துவிளங்க வேண்டுமென்றும் அதற்கேற்ப சகல ஐஸ்வரியங்களையும் இறைவன் அருளவேண்டும் என்றும் வேண்டி இறைவனை இறைஞ்சுகிறோம்.

**ஞானலிங்கம் சுதாகரன்**
ஆண்டு 13, மாணவ தலைவன்



படிப்பகம்

www.padippakam.com

## கல்லூரியின் மாணவ விடுதிகள் மீண்டும் ஆரம்பம்

மாணவர்களுக்கு தங்குமிட வசதிகளை அளித்துக் கல்விப் பணியை மேற்கொள்ளும் கைங்கரியத்தை எமது கல்லூரி மீண்டும் ஆரம்பித்துள்ளமை வரவேற்கக் கூடியதொன்றாகும். தற்போது ஏறக்குறைய 60 மாணவர்கள் விடுதிகளில் தங்கியிருந்து கல்வி பயில்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.



## ஆங்கிலக் கவிதை நூல் வெளியீட்டு விழா

வட மாகாணத்தில் முதல் முதல் ஆங்கிலக் கவிதை நூல் பெண் எழுத்தாளராக விளங்குபவரும் எமது கல்லூரி ஆசிரியையுமான செல்வி நாகநந்தினி சங்கரப்பிள்ளையின் 'PEN' ஆங்கிலக் கவிதை நூல் வெளியீட்டு விழா 26.01.1998 இல் எமது கல்லூரியில் இடம் பெற்றது. ஆசிரியர் கழகத்தின் அனுசரணையுடன் இவ்விழா வெகு விமரிசையாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும். எமது ஆசிரியருடைய இக்கன்னி முயற்சியை வரவேற்கிறோம். பாராட்டுகிறோம். எமது கல்லூரித்தாய் இச்சாதனையால் பெருமகிழ்ச்சி அடைகிறாள்.

## அகர வரிசையில் ஆசிரியர்

அன்பும் அறிவும் மிக்கவராய்
ஆற்றல் அனுபவம் உடையவராய்
இன்னல்யாவும் களைபவராய்
ஈகை உள்ளம் கொண்டவராய்
உன்னத பணியால் உயர்ந்தவராய்
ஊக்கமாய் எம்மை வழிநடத்தி
எண்ணும் எழுத்தும் கற்பித்தே
ஏணியாகி ஏற்றம் காட்டிடுவார்
ஐயம் யாவும் போக்கிடுவார்
ஒற்றுமைப் பண்பை வளர்த்திடுவார்
ஓடம் போல் கரை யேறிடுவார்
ஔவை வழியில் நிறுத்திடுவார்

**ஜே. ஜெராட் நிரோஷன்,**
ஆண்டு 8

## இடம் பெயர்வு

**றோபேட் சசிகுமார், ஆண்டு 9"A"**





படிப்பகம்

www.padippakam.com

# வளி மண்டலத்தின் பாதுகாப்புக் கவசம் ஓசோன்

ஓசோனானது ஒட்சிசனின் பிற திருப்பங்களில் ஒன்று சூழல் மாசடைதல் சூழல் பாதுகாப்புப் பற்றிய கலந்துரையாடல்களில் ஓசோன் படை அதன் பாதுகாப்பு பற்றி பல்வாறாக பிரஸ்தாபிக்கப்படுவதை பத்திரிகைகள் வாயிலாக அறிந்துள்ளோம். வழிமண்டலத்தை சூழ ஒரு பாதுகாப்பு கவசமாக ஓசோன் படை விளங்குகிறது. சூரியனிலிருந்து வரும் சக்தி கூடிய கதிர்கள் உதாரணமாக புற ஊதாக் கதிர்களைத் தடுத்து நிறுத்தி இக்கதிர்களால் மனித குலத்துக்கு ஏற்படக் கூடிய நோய்கள் மற்றும் அசௌகரியங்களிலிருந்தும் பாதுகாக்கிறது. இப்படையின் பாதுகாப்பானது மனித குலத்தின் அழிவுக்கே இட்டுச் செல்லும் என அறிவியலாளர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

'ஓசோன் படையானது ஒட்சிசன் அணுவின் மூன்று அணுக்கள் சேர்ந்து உருகியதாகும். 'வான்மாரம்' என்ற விஞ்ஞானி வளியினூடு அல்லது ஒட்சிசன் வாயுவினூடு உயரழுத்தம் பிரையோகிக்கப்பட்டு மின்னோட்டம் செலுத்தப்பட ஒருவித மணம் உண்டாவதைக் கண்டார். இதன் பின்பு 55 ஆண்டுகளின் பின்பு 'ஷான் பின்' என்ற விஞ்ஞானி அம்மணத்துக்கு காரணம் புதியதொரு வாயுவே என்று கூறி அதற்கு ஓசோன் என்று பெயரிட்டார். ஓசோன் என்பது ஓசோ OZZO என்ற கிரேக்கச்சொல்லிலிருந்து வந்ததாகும். ஓசோன் என்றால் மணம் என்று பொருள்

1866 இல் 'சோராட்' என்ற விஞ்ஞானி இவ்வாயு ஒட்சிசன் அணுவின் பிற விருப்பமென்றும் அதன் மூலக் கூற்றுச் சூத்திரம் O3 எனவும் ஆய்வுகளின் மூலம் தெரிவித்தார். புற ஊதாக் கதிர்கள் காற்றில் செலுத்தப்பட்ட ஒட்சிசன் வாயுவிலிருந்து ஓசோன் வாயுப்படை உருவாகிறது. இதனால்தான் இவ்வோசோன் படை வழியின் மேற்படையிற் காணப்படுகிறது.

இதுதவிர குறைந்த வெப்பநிலையில் புளோரின் நீருடன் தாக்கம் புரியும்போதும் பொஸ்பரஸ் காற்றில் பொதுவாக ஒட்சியேற்றம் அடையும்போதும் வாயுவானது தொழில் முறையில் பெருமளவு உற்பத்தி செய்யப்படுகிறது.

ஓசோன் ஒட்சியேற்றும் கருவி என்பதால் தாவரப்பகுதிகளை ஒட்சியேற்றி நிறத்தை நீக்குகின்றன. இது நல்ல நுண்ணங்கிக் கொல்லியாகவும் தொழிற் படுவதால் குடிநீரைத் தூய்மைப்படுத்தப் பயன்படுகிறது. மேலும் விண்வெளிக் கலங்களில் எரிபொருளாகப் பயன்படுகிறது.

வளிமண்டலத்தில் காணப்படும் ஓசோன் படையானது குளோரோ புளோரா காபன் சேர்வைகளால் அழிவுறுவதாக அறியப்பட்டுள்ளது. இதனால் புற ஊதாக் கதிர்கள் புவியை அடையும் வாய்ப்பு அதிகமாகும். இதன் காரணமாக மனிதனுக்கு தோற்புற்று நோய்கள் ஏற்படும். இக்காரணங்களைக் கருத்தில் கொண்டு சில சூழல் அமைப்புக்கள் மக்களுக்கு அறிவுறுத்தி வருகின்றன. இதன் வெளிப்பாடே சில வெளிநாட்டு உற்பத்திப் பொருட்களில் "ஓசோன் நண்பன்"என ஆங்கிலத்தில் பொறிக்கப்பட்டிருப்பதை காணக் கூடியதாக இருக்கிறது.

**றெ. அலெக்ஸ் அஞ்ஜெலிற்றோ.**
ஆண்டு-13 (விஞ்ஞானம்)



க.பொ.த (உ/த) பரீட்சையில் (கணிதப் பிரிவு) அதிகூடிய திறமைச்சித்திகளைப் (4A) பெற்று கல்லூரிக்கு பெருமையையும், புகழையும் தேடித்தந்த மாணவன் க. ஸ்ரீவிசாகன்.



படிப்பகம்

www.padippakam.com

1997 ஆம் அண்டு யாழ் வலயம் இரண்டில் பாடசாலைக்கு இடையில் இடம் பெற்ற உதைப்பந்தாட்டப்போட்டியில் சம்பியன் பட்டம் பெற்ற அணியினர், அதிபர் பொறுப்பாசிரியருடன் காணப்படுகிறார்.



## எழுவாய் ஹென்றியரசர் கல்லூரியே!

எழில் நிறைந்த இளவாலயம்தி தன்னிலிலே
பொளிலென வளம் பெருக்கும் அறிவுசால் ஆசான்களோடு
துளிர் விட்டதே 1907 இல்
புனித ஹென்றியரசர் கல்லூரி

பிடிப்புடனே இளவாலையில் விழுது விட்ட இக்கலை விருட்சம்
படிப்பார்வம் கொண்டவரின் கலைப்பசி போக்கிநிற்கும்
துடிப்புடனே தட, களப்பயிற்சி பெற வளிவகுக்கும்
நடிப்பு, இசை, நடனம் சித்திரத்தில் ஆற்றலைப்பெருக்கி வைக்கும்

ஆக்கத்திறன் அனைத்துக்கும் ஊக்கமிங்கு அளிக்கப்படும்
காக்கவேண்டும் ஒழுக்கமெனக் கட்டளையும் இடப்படும்
வாக்கு வன்மை வளர்ச்சிக்கு வாய்ப்புகள் வழங்கப்படும்
நோக்கம் இளம் தளிர்களின் அறிவொழுக்க மேம்பாடே

விடிவெள்ளியென விளங்கிடும் எம் அதிபர்
"கடின உழைப்பு எதனையும் வெல்லும்" என்று
இடித்துரைத்திடுவர் இளஞ்சிறுவர்க்கு எப்பொழுதும்
நொடிப்பொழுதும் நாம் நெஞ்சம்சோர்ந்திரோம்

நான் எனும் மமதையிலா ஹென்றியரசர் கல்லூரியே
வான்னிலவுக்கும் தேய்தலுண்டு வளர்தலுண்டு
கூன் நீ கொள்ளவேண்டாம் புலம் பெயர்ந்து திரும்பி விட்டோம்
தேன் எனத்தித்திக்கும் என்சேவை தொடரட்டும் எம்முரில்

எழுபத்தேழாம் ஆண்டு அரசு உனைப்பொறுப்பேற்றாலும்
பழுதில்லை உன்பணிக்கு பாரினில் எஞ்ஞான்றும்
செழுமை உனக்கு ஊட்டிடுவர் நின் பழைய நண்பர்கள்
எழுவாய் ஹென்றியரசர் கல்லூரியே! மேலும் மேலும் புகழுடனே

**க. அருண்ராஜ்**
மாணவ முதல்வன்

**1997 ஆம் ஆண்டு யாழ் வலயம் இரண்டில் உடற்பயிற்சி அணியினர் சம்பியன் பட்டம் பெற்றனர்.**

நன்றி: ஞாயிறு தினக்குரல்
10.05.1998
தொகுப்பு : .
திருமதி கலா லோகநாயகம்
(பழைய மாணவி-பிரான்ஸ்)



படிப்பகம்

www.padippakam.com


# GAYATHIRY

Le Gérant Mr. Anura

## GAYATHIRY ENTREPRISE

210, Rue du Fbg. Saint Denis
75010 PARIS

Tél : 01 42 09 22 43 Fax : 01 46 07 34
Mobil: 06 07 02 96 54 / 06 08 19 10 31




படிப்பகம்

www.padippakam.com


# SATHEEPAN Entreprise

*Généralde Bâtiment*



***Menuiserie***
***Décoration - Rénovation***
***Agencement - de - Magasins***
***Tous - Travaux - de - Pose***

குறைந்த செலவில், குறித்த தவணையில்
உங்கள் வீட்டிற்கான அனைத்து தளபாட,
கூரை, மாபிள், யன்னல், மின்சார, பைப்லைன்
போன்ற அனைத்து வேலைகளிற்கும், சதீபன்
என்ற பிறைஸ்

தொடர்புகளுக்கு : 01 43 83 47 58

# HARTLEY COLLEGE

உதயமாகும் எமது கல்லூரியின் பழைய மானவர் சங்கத்தின்
பிரான்ஸ் கிளை சார்பில் வாழ்த்துகின்றோம்
வாழ்க! வளர்க!!

குறிப்பு — பிரன்ஸ் வாழ். யாழ்/பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும், எம்மோடு தொடர்பு கொள்ளுமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு - ராஜமனோகரன் முரளிதரன்
- முருகேசு திருக்குமார்
(ஒருங்கிணைப்பாளர்கள்)
*30, Rue Saint Maur, Paris 75011*

Tél : 01 39 87 08 38
01 48 05 92 34
**Mobil:**
*06 14 92 72 86*
*06 01 07 24 66*




படிப்பகம்

www.padippakam.com


# KUMAR'S SHOP



## குமார்ஸ்

தரமான ஆடைத் தெரிவுகளுக்கும்
நகைத்தெரிவுகளுக்கும் குமார்ஸ்



**KUMARS SHOP**
80, bd Barbes, 75018 Paris
M°: Marcadet Poissonniers
Té/ Faxl: 01 42 59 35 10

**K.T.C Jewellery**
193, rue Fg. st. Denis
75010 Paris
Tél: 01 42 05 41 36

கொமிசன் இல்லாத நாணய மாற்றுக்கு

**SINGAPORE EXCHANGE CO.**
38, rue de Saint Quentin 75010 Paris
Tél: 01 48 74 48 21
Fax: 01 49 70 06 32

**SINGAPORE EXCHANGE CO.**
*90 Bd Rochechouart, 75018 Paris*
*Tél: 01 42 23 03 10*




படிப்பகம்

www.padippakam.com



இது களம்பலகண்ட வெள்ளையனின் கோட்டையல்ல.
எம் எந்தையும்தாயும் கூடிக்குலாவி, பின்னர் நாம் துள்ளித்திரிந்து ஓடிவிளையாடி மகிழ்ந்திருந்த எம் பள்ளியின் முகப்பு.
யார் யாரிடம் வலிப்பது?
அனாதைபோல் பெற்றபிள்ளைகளிமே கையேந்தும் நிலையா எம் அன்னைக்கு?

**இடர் பட விடோம்! உறுதி பூணுவோம்!**

# மலர் பற்றி...

மலர் மென்மையானது. ஆனால் வாடாமலர் அப்படியல்ல. இந்தமலரும் அப்படித்தான். ஒரு மலர் ஒன்றின் கடுமை பற்றி, மலர் பற்றி அறிந்தோர் மட்டுமே அறிவர். அதுவும் எம்மைப்போல் பழையமாணவர் சங்கம் ஒன்றின் மலர்பற்றி சொல்லத்தேவையில்லை. தனித்து நின்று தத்தளிக்கும்போது உதவிக்கு யாரையுமே காணக்கிடைக்காது. இனி, குறைகாண! ஆலோசனை வழங்க! ஆஹா! எத்தனை முத்துக்கள்!

போற்றுவோர் போற்றட்டும்
புழுதி வாரித்தூற்றுவோர் தூற்றட்டும்
எம்மால் முடிந்ததை முடிந்தவர்களோடு இணைந்து செய்வோம்.

இன்னொருபுறம் மலரின் குறைகள் போதாமைகளுக்குப் பொறுப்பேற்றுக்கொள்ளுவதோடு மலருக்கு வாழ்த்துச்செய்திகள், ஆக்கங்கள், முகம்கோணாது இன்முகத்தோடு விளம்பரம் தந்துதவிய அனைத்து அன்புநெஞ்சங்களுக்கும் தலைதாழ்த்தி மலர்க்குழு சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

— மலர்க்குழு



படிப்பகம்

www.padippakam.com




# Restaurant

# SHALINI



*Spécialités de l'inde*

Vous prie de noter que nos plats peuvent être servis selon votre préférence : épicés, peu épicés, très épicés ou non épicés.

Une présentation différente cuite au tandoor.

23, rue Cail, 75010 Paris
Tél.: 01 40 34 20 72
M° : La Chapelle ou Gare du Nord

தந்துரிவகைகள், சிற்றுண்டி வகைகள், குளிர்பானங்கள், என பலவகை உணவுகள் சுவைத்து மகிழ்ந்து அனைத்து மக்களின் இதயங்களைக்ககவர்ந்த ஷாலினி உணவகத்தை நாடுங்கள்.

விசேட வைபவங்களுக்கு சாப்பாடு ஓடர்கள் செய்து கொடுக்கப்படும்.

**ஷாலினி உணவகம்**

23, rue Cail, 75010 Paris
Tél.: 01 40 34 20 72
M° : La Chapelle ou Gare du Nord

## ஷாலினி உணவகம்

இலங்கை, இந்திய உணவுவகைகளை சுவைத்திட என்றும் நாடுங்கள் ஷாலினி உணவகம்.

சிறியோர் முதல் முதியோர் வரை விரும்புவது ஷாலினி உணவகம்.

*தினசரி விசேட உணவுகள்*

ஞாயிறு புரியாணி (ஆடு. மாடு. கோழி)
திங்கள் கணவாய்கறி சாப்பாடு
செவ்வாய் மீன்கறி கல சாப்பாடு
புதன் பிரைட் றைஸ்
வியாழன் சிக்கின் சிக்சிரிவைவ்
வெள்ளி மரக்கறி சாப்பாடு
சனி நூடில்ஸ்
.............................




படிப்பகம்

www.padippakam.com





புலம் பெயர்ந்த நாட்டிலும்
உதைபந்தாட்டத்துறையில்
தனக்கே உரித்தான சிறப்பை
தொடர்ந்தும் காத்துவரும்
பிரெஞ்சுக் கிளையின்
விளையாட்டு அணியினர்



அகில இலங்கையில்
கலைத்துறையில்
தனிக்கொடி நாட்டிய
கல்லூரியின் மைந்தர்கள்
புலம்பெயர்ந்த நாட்டிலும்
புகழ் பரப்பி வருகிறார்கள்.

- பிரெஞ்சுக்கிளையின்
கலை அணியினர்.-

www.padippakam.com

# கல்லூரி கீதம்

வாழிய வாழியவே!
என்றும் வளர்மதி போலவே
வளர்கவே என்றியர் கல்லூரி
வாழிய வாழியவே...

1

மன்னர் தம் என்றி யார் பாதுகாவலில்
இன்னல்கள் ஒன்றும் இன்றி நாம் வாழவே
வன்மம் பகை பழி பாதுகம் இன்றி
சின்னஞ்சிறுவர்கள் யாவரும் வாழவே
வாழிய வாழியவே...

2

பற்சிலை வெண் போற்ற கொடிதான்
பறக்குமே என்றியார் முன்றலில் தான்
அச்சம் இன்றி நாம் அஞ்சலி செய்வோமே...
அதனையே வெற்றி விருதெனக் கொள்வோமே
வாழிய வாழியவே...

3

கல்வி ஊக்கமும் கடவுள் வழிபாடும்
தெய்வீக ஞான சேவையின் ஊக்கமும்
மெய்நெறி ஊட்டும் மேகை சேவையும்
எல்லாவர்க்கும் எழில் ஒளி காட்டவே
வாழிய வாழியவே...



அச்சுப்பதிப்பு : கிருஷ்ணா அச்சகம் - பிரான்ஸ்

படிப்பகம்